Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 08 விலை ரூபா: 5·50

# ஈழநாதம்

THE EELANAATHAM Weekly வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2202 வைகாசி 10 ( 24 – 05 – 1991 ) வெள்ளிக்கிழமை ஓசை: 95

## புலமைப்பரிசில் பரீட்சை ஆகஸ்ட் 4-ல் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

ஆண்டு ஐந்து மாணவர்களுக்கான புலமைப் பரிசிலுக்கான பரீட்சை எதிர்வரும் ஆகஸ்ட் 4 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இப்பரீட்சைக்குத் தோற்றவுள்ள பாடசாலை மாணவர்களின் விண்ணப்பங்களை ஆரம்பப்பிரிவு அதிபர்கள் கொத்தணி அதிபர்களிடம் எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன் சமர்ப்பித்தல் வேண்டும் (8ஆம் பக்கம் பார்க்க)

### தேசிய அரசாங்கம் அமைக்கும்

# வெங்கட்ராமன் ஆலோசனை

# அரசியற் கட்சிகள் நிராகரிப்பு

(டில்லி)

இந்தியாவில் எழுந்துள்ள அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து அனைத்து முக்கிய கட்சிகளும் பங்கேற்கும் தேசிய அரசாங்கம் அமைக்க ஜனாதிபதி வெங்கட்ராமன் தெரிவித்த ஆலோசனையை அநேக அரசியல் கட்சிகள் நிராகரித்துள்ளன.

மத்தியில் தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் அரசியல் கட்சிகளுடன் ஆலோசனை கலந்தார். பாரதீய ஜனதாக்கட்சி மாத்திரம் தேசிய அரசை நிறுவுவது தொடர்பாக சாதகமான அபிப்பிராயத்தைத் தெரிவித்தது. ஏனைய பிரதான கட்சிகள் மேற்படி ஆலோசனையை ஏற்றுக் கொள்ளவில்லை.

இந்திரா காங்கிரஸ் கட்சியும் தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் தேசிய அரசாங்கம் அமைவது தொடர்பான கருத்தை ஏற்க மறுத்துள்ளன. பாரதீய ஜனதாக் கட்சி மற்றக் கட்சிகளின் அபிப்பிராயத்தையடுத்து தேசிய (8 ஆம் பக்கம் பார்க்க)

## 3 தமிழர் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பெரியகல்லாறில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் கடந்த திங்கட்கிழமையன்று அவ்விடத்தைச் சேர்ந்த மூன்று அப்பாவித் தமிழ் மக்களைக் கைதுசெய்து முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இவர்கள் பற்றிய தகவலெதுவும் இதுவரை கிடைக்கவில்லை.

## ஐம்பது இலங்கையர் கைது

(சென்னை)

தமிழ்நாட்டு திருவான்மியூரில் இலங்கையைச் சேர்ந்த ஐம்பது பேர் தமிழ்நாட்டு பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காங்கிரஸ் தலைமை ஏற்க சோனியா காந்தி மறுப்பு

(டில்லி)

அகில இந்திய இந்திரா காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை ஏற்க திருமதி சோனியா காந்தி மறுத்துள்ளார்.

சோனியா காந்தி புதுடில்லியில் நேற்று வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தனது குடும்பத்துக்குஏற்பட்ட சொல்லொணாத் துயரம் கட்சித் தலைமைப் பொறுப்பை ஏற்க தம்மை ஏலாமல் செய்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்திரா காங்கிரஸ் செயற்குழு நேற்று முன்தினம் புதுடில்லியில் கூடி சோனியா காந்தியைக் கட்சியின் தலைவராக ஏகமனதாகத் தேர்ந்தெடுத்திருந்தது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### தீசன், மன்சூர்

மணலாற்றுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடன் நேற்றைய தினம் ஏற்பட்ட மோதல் சம்பவமொன்றில் தீசன் (மயில்வாகனம் ராஜா, பெரியதம்பிரான் வீதி, அக்கரைப்பற்று), மன்சூர் (காத்தமுத்து ஜெ'தீசன் கண்ணகிபுரம், வாழைச்சேனை) ஆகிய இரு வீரவேங்கைகள் வீர மரணமடைந்துள்ளனர்

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### தவணை முடிவடைந்த

## காசுக்கட்டளைகள் மாற்ற தபாலகத்தில் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு காசுக்கட்டளைகளும், பிரித்தானிய தபாற் கட்டளைகளும் யாழ். மாவட்ட அஞ்சலகங்களில் மாற்றுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிகிறது. மேலும் ஆறுமாத காலம் முடிவடைந்த உள்ளூர் காசுக் கட்டளைகளும் மேலதிக கட்டணம் (8ஆம் பக்கம் பார்க்க)

## உலகத் தலைவர்கள் டில்லியில் கூடுகின்றனர்

(டில்லி)

ராஜீவ்காந்தியின் இறுதிச் சடங்குகளில் கலந்துகொள்வதற்காக உலகத் தலைவர்கள் பலரும் புதுடில்லி விரைந்து வருகின்றனர் என செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிலங்காவில் இருந்து பிரதமர் டி. பி. விஜயதுங்கா, ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோர் டில்லி சென்றுள்ளனர்.

முதலாவதாக பூட்டான் மன் (8 ஆம் பக்கம் பார்க்க)

## ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப் பணிப்பு

(கொழும்பு)

வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் சேவை புரியும் ஊழியர் பலர் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளைப்பெற உரிமையிருந்தும் திணைக்களங்கள் நிதி பற்றாக்குறை காரணமாக அவற்றை வழங்கவில்லை.

சில திணைக்களங்கள் ஆறு மாதகாலங்களுக்குரிய ஊக்கு (8ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவின் இறுதி யாத்திரை

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மரணச் சடங்கு இன்று பிற்பகல் நடைபெறும்.

மாலை நான்கு மணியளவில் யமுனை ஆற்றங்கரையில் சக்திதள மயானத்தில் ராஜீவ் காந்தியின் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

சுமார் நாற்பதுக்கும் அதிகமான வெளிநாட்டு அரசுகளின் தலைவர்களும், மற்றும் முக்கியஸ்தர்களும் மரணச் சடங்கில் கலந்து கொள்வார்கள்.

ராஜீவ் காந்தியின் பூதவுடல் தீன்மூர்த்தி பவனிலிருந்து பிற்பகல் ஒரு மணிக்கு எடுத் (8 ஆம் பக்கம் பார்க்க)

### சிறிலங்கா அரசாங்கம்

## மூன்று தினங்களுக்கு யுத்த நிறுத்த அறிவிப்பு

மே 26ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு தொடக்கம் 29 ஆம் திகதி புதன்கிழமை நள்ளிரவு வரை யுத்த நிறுத்தத்தைப் பிரகடனம் செய்வதென அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

மகாசங்கத்தாரும், சமயத் தலைவர்களும். பௌத்த சங்கங்களும் விடுத்த வேண்டுகோளைப் பரிசீலனை செய்த (8ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவில் இன்று துக்கம்

(கொழும்பு)

முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டமைக்கு அனுதாபம் தெரிவித்து அவரது இறுதிக் கிரியைகள் இடம்பெறும் இன்றைய தினம் துக்கதினமாகக் கடைப்பிடிக்கப்படுமென்று சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

### தாண்டிக்குளத்தில் இருந்து

## இராணுவம் ஷெல் தாக்கு ஒருவர் பலி; ஐவர் காயம்

(யாழ்ப்பாணம்)

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் மாலை 6-30 மணியளவில் மேற்கொண்ட ஷெல் தாக்குதலின்போது ஒருவர் பலியானார், ஆறுபேர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர்.

மேற்படி சம்பவத்தில் மடு (8ஆம் பக்கம் பார்க்க)

## நியூயோர்க் டைம்ஸிற்கு ராஜீவின் இறுதிப் பேட்டி

(சென்னை)

"இப்போது நான் பிரதமர் இல்லையே. நான் பிரதமராவதற்கு முன்பும் இவ்வாறுதான் பிரசாரம் செய்தேன். இப்போது நான் பிரதமர் பதவியில் இல்லை என்பதால் பழைய பாணியிலேயே பிரசாரத்தை மேற்கொள்கிறேன்" என்று காலஞ்சென்ற முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி தெரிவித்திருந்தார்.

'நியூயோர்க் டைம்ஸ்' நிருபருக்கு ஸ்ரீபெரும்புதூர் பகுதி பிரசாரக் கூட்டத்திற்கு சென்றுகொண்டிருந்த வேளையில் காருக்குள் இருந்து பேட்டியளித்தபோது தெரிவித்தார்.

நிருபர் "பகிரங்கமாகப் பிரசாரம் செய்கிறீர்களே உங்களுக்குப் பயமில்லையா? பாது (8 ஆம் பக்கம் பார்க்க)

## சீமெந்து கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு சம்பளம் 3 மாதம் இல்லை

(யாழ்ப்பாணம்)

சீமெந்துக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான மூன்று மாதச் சம்பளக் கொடுப்பனவு இதுவரைவழங்கப்படவில்லை.

மார்ச், ஏப்பிரல், மே மாதங்களுக்கான சம்பளக்கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளும் முயற்சியில் நான்கு சிரேஷ்ட அதிகாரிகள் வார இறுதியில் கொழும்பு செல்லவுள்ளார்கள். இதேவேளை ஊழியர்களின் மூன்று மாத இடர்கடன் தொடர்பான ஆவணங்களும் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன. கடனுக்கான பணத்தையும், அதற்கான அங்கீகாரத்தையும் கொழும்பில் பெறவேண்டுமாம்.

கடனையும், சம்பளக் கொடுப்பனவுக்கான கட்டு நிதியையும் இந்தமாத முடிவுக்குள் பெறககூடியதாகஇருக்கும் என்று ஒரு உயர் அதிகாரி நம்பிக்கை தெரிவித்தார்.

## மாரடைப்பால் மரணம்

கேரதீவில் நேற்று முன்தினம் கிளிநொச்சி செல்வதற்காக வரிசையில் நின்று கொண்டிருந்த கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த மா. முருகேசு என்பவர் திடீரெனமரணமடைந்தார்

இவரது சடலத்தை கேரதீவு சங்குப்பிட்டி துறைமுகப் பொறுப்பாளர் சபேசன் சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளார். (71)


### வரி விளம்பரம்

தேவை
நெல்விதை, தேவை.
மில்க்வைற், யாழ்ப்பாணம்.
(B/2556)


## பெனாசிரின் விசாரணையில் பிரான்சிய சட்டத்தரணிகள்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசிர் பூட்டோ அவரது கணவர் ஆசிப் சர்தாரி பற்றி நடைபெறும் நீதிமன்ற விசாரணைகளைக் கவனிக்க சர்வதேச மனித உரிமைகளுக்கான சம்மேளனம் பிரான்சிய சட்டத்தரணிகள் இருவரை அனுப்பியுள்ளது.

முன்னதாக பெனாசிர் மீதும் அவரது கணவர் மீதும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு பாகிஸ்தானிய ஜனாதிபதி குலாம் இஷாக் கான் நீதிமன்றங்களுக்கு உத்தரவு இட்டிருந்தார்.

இந்த நீதிமன்ற விசாரணைகளைக் கவனிப்பதற்காகவே சர்வதேச மனித உரிமைகளுக்கானசம்மேளனம் இரண்டு பிரான்சிய சட்டத்தரணிகளை பாகிஸ்தானுக்கு அனுப்பியது.

## பெற்றுக் கொள்ளவும்

(பூநகரி)

கேரதீவு சங்குப்பிட்டி பகுதியில் கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளான கந்தையா வாமதேவா (370722892V), கந்தன் சத்தியசீலன் (652961738V) சோமசுந்தரம் கந்தசாமி (423262176V) ஞானப்பிரகாசம் கஜேந்திரன் (மாணவர் அடையாள அட்டை) என்பன பூநகரி நிதிப்பிரிவு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன உரியவர்கள் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (71)

## 18 வருட சிறைத்தண்டனை

(லண்டன்)

பிரித்தானியாவில் வசிக்கும் 18வயது பள்ளி மாணவி பெட்ரீஸியாகாஹில்போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டாரென்ற குற்றச்சாட்டில் 18 வருடம் 9மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இக் குற்றத்திற்கு அளிக்கப்படும் தண்டனை 25 வருடங்களாகும். வயது. குற்றவாளி ஆரம்பத்தில் அளித்த சாட்சியம் ஆசியன கவனித்து தண்டனை சற்றுக் குறைக்கப்பட்ட தாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

## திலகரத்தினா பிரித்தானியா சென்றார்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பெர்னட் திலகரத்தினா அவசரமான முக்கிய பயணமொன்றை மேற்கொண்டு கடந்த ஞாயிறன்று பிரிட்டனுக்கு சென்றார்.

இவரது பயணத்தின் போது பிரித்தானிய வெளியுறவுச் செயலாளருடன் கொழும்பிலுள்ள பிரித்தானிய தூதுவர் உள்ளூராட்சித் தேர்தலின் போது நடந்து கொண்ட முறை சம்பந்தமாகப் பேசுவார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடபகுதி ரயில் சேவையின்றி 10 கோடி நஷ்டம்

(கொழும்பு)

வடபகுதிக்கான ரயில் போக்குவரத்து நடைபெறாததால் புகையிரத திணைக்களத்திற்கு பன்னிரண்டு மாத காலத்திற்குள் பத்துக் கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

413 கிலோ மீற்றர் நீளமான காங்கேசன்துறை கொழும்பு ரயில் சேவை மாதம் ஒன்றுக்கு ஒரு கோடி ஐந்து லட்சம் ரூபாய் வருமானத்தை பெற்றுகொடுத்தது. ஆனால் இப்போது வடபகுதிக்கான ரயில் போக்குவரத்து வவுனியா வரையுமே நடைபெறுகிறது.

தகுந்த பாதுகாப்பு வழங்கப்பட்டால் வழமையான ரயில் சேவையை மீண்டும் காங்கேசன்துறை வரை ஏற்படுத்த முடியும் என்றும், அதற்கு முன்னர் ரயில் பாதைகள் செப்பனிடப்படவேண்டும் என்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.


### இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ்ப்பாணக் கிளை

நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவு

### அங்கத்தினர் கூட்டம்

மேற்படி கூட்டம் 27.05.91 திங்கட்கிழமை பி. ப 3.00 மணிக்கு யாழ் / கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறும். நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அனைவரையும் இதில் பங்கு பற்றிக் கொள்ளும்படி அழைக்கின்றோம். இதில் புதிய உத்தியோகத்தர் தெரிவும் நடைபெறும்.

73, கண்டி றோட், யாழ்ப்பாணம்.
ச. சிவானந்தராசா, கௌரவ செயலாளர்
(B / 2572)



### 45ஆம் நாள் நினைவஞ்சலி



**வீரவேங்கை லெப்டினன் ரகுராம்**

(பழனிவேல் நந்தவரதன்)
குலனையூர்

வீரஜனனம்: 20 - 04 - 1972
வீரமரணம்: 10 - 04 - 1991

ஈழம் எனும் தமிழ் நாட்டினிலே
பச்சைப் பசும் வயல பால் சொரி மாடுகள்
வயல்களாய் சூழ்ந்த அராலி தனில்
பழனிவேல் கமலாதேவி
பக்குவமாய்ப் பெற்றெடுத்த
அழகு நிறை நந்தவரதா!
நாமுன்னைப் பிரிந்து நிதம்
வாடுகின்றோம் ஐயா!
கல்லூரி வாழ்வை விட நாட்டுக்
கடமையையே பெரிதென்று
துப்பாக்கி தூக்கி நீ தமிழர்
துயர் களையச் சென்றாய்!
நிகரில்லாத் திறமையுடன்
நீயிங்கு வாழ்ந்தாய்
நீசர்களை அழிப்பதற்கு
காரைநகர்க் கயவர்களின்
களம் நோக்கிச் சென்றாய்!
குலனையூரில் பிறந்த நீ
குண்டு பட்டுக் குருதி கொட்டி
குலமானம் காத்தாய்!
நந்தவரதன் என்ற நாமத்தை
நாம் மறவோம் நாளும்.

இவருடன் வீரமரணமடைந்த லெப். குட்டியையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

24-05-1991
அராலி கிழக்கு
சிற்றூரவை
(B/ 2566)



### படமாடம்

உங்களுக்குத் தேவையான
- படவகைகளைப் பெற்றுக் கொள்ளவும்
- படங்களுக்குச் சட்டமிடவும்
- கண்ணாடி வகைகளை

விரும்பிய அளவுகளில் குறைந்த விலையில் பெற்றுக் கொள்வதற்கும்

நீங்கள் நாடவேண்டிய முன்னணி ஸ்தாபனம்

★ படமாடம் ★

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(B/2458)



### நினைவு கூருகின்றோம்...

1991 - 05 - 24



கப்டன்
**நகுலன்**
(வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் - மீசாலை வடக்கு)

1985ஆம் ஆண்டு பன்குளத்தில் சிறிலங்கா விமானப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 பொதுமக்கள்

1987ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரமரணமடைந்த
- மணியண்ணன் (வே. தெய்வநாயகம் - மூளிப் பொற்பதனை)

இதே ஆண்டு வீரமரணமடைந்த
- செந்தில் (விக்னரட்ணம் - தம்பலகாமம்)
- காந்தன் (மட்டக்களப்பு)

1988ஆம் ஆண்டு நித்திகைக் குளத்தில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரமரணமடைந்த
லெப். விக்கி (மேகவர்ணசாமி சிறீகிருஷ்ணன் - வல்வெட்டித்துறை)
குட்டி (நவாலி)

இதே ஆண்டு கல்வயலில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரமரணமடைந்த
கப்டன் நகுலன் (வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன் - நகுலேஸ்வரன் வீதி, மீசாலை வடக்கு)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

- மேற்குறிப்பிடப்பட்ட மாவீரர்கள் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவர்களாவர்.

: விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி
(B/ 2560)

ஈழநாதம்
வெள்ளி மஞ்சரி



எமது படையணி கடக்க வேண்டியது நெருப்பாறென்பது எமக்குத் தெரியும். ஆனால் அதைத் தாங்கக் கூடிய மக்கள் ஆதரவு என்னும் கவசம் எம்மிடம் உண்டு.

-வே பிரபாகரன்-

## இந்தக் கியூக்களும் மாறாது! இதயச் சுமைகளும் தீராது!!



வவுனியா பூங்காவை எண்ணிட இங்கே
வயிற்றைக் கலக்கும் நிலைகளுணர்ந்தும்
போவது மட்டும் விடுவதே இல்லை...
போகுமிடம் தனை போயடையும் வரை
இந்தக் கியூக்களும் மாறாது எங்கள்
இதயச் சுமைகளும் தீராது
எங்கள் கியூக்களின் எழில் மிகு காட்சிகள்
எந்த நாட்டிலும் காண்கிலர், காணவிரும்பிடின்
முத்திரைச் சந்திக்கு விரைந்திடுவீரே?

-வளவை வளவன்




தமிழ்த் தேசிய இனத்தின் பிரச்சினைக்கு தமிழீழமே தீர்வு என்பதை 1977ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலின் போது தமிழீழ மக்கள் தெளிவாக உணர்த்தினர். இந்த அரசியல் தொடர் ஓட்டத்தில் முன்னே செல்லவேண்டிய வாகனங்கள் திசைமாறி, இது ஒரு தேசிய இனத்தின் விடுதலைப்போராட்டம் என்பதை மறந்து மாவட்ட சபை என்றும் வேலை வங்கிப்படிவம் என்றும் பின்னோக்கி வந்தன. எதை எதைப் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று சிந்திக்க வேண்டிய தலைமை எதை எதை விட்டுக்கொடுக்கலாம் என்று சிந்தித்தது. அக்காலகட்டத்தில் தமிழீழக் கோரிக்கை என்பது பொழுது போக்கு அரசியலுக்கான விடயமல்ல என்பதை தமிழீழ மக்களுக்கு தெட்டத் தெளிவாக விளக்கியவன் இறைகுமாரன். தலைவர்கள் தவறிழைக்கமாட்டார்கள் என்று கண்மூடித்தனமாக இருந்த காலகட்டத்தில் ஒரு நக்கீரனாக உருவெடுத்தவன் இவன்.

தம்மைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் போர்வீரர்களின் அணியாகக் கூறிக்கொண்ட தமிழ் இளைஞர் பேரவை கூட்டணிக்கு மண்டியிட்டு எதிர்கால எம்.பி.க்கள் என்ற கனவில் திளைத்தபோது இலட்சியப் பற்றுள்ள இளைஞர்களை அதிலிருந்து பிரித்தெடுத்து தமிழ் இளைஞர் பேரவை விடுதலை அணி என்ற அமைப்பை உருவாக்கினான். இதன் சார்பில் இளைஞர் குரல் என்ற பத்திரிகையை வெளியிட்டு போராட்டத்துக்கு மக்களை அணிதிரட்டினான்.

குற்றத்தைச் சுட்டிக்காட்டுவோரை எல்லாம் குழப்பவாதிகள் என்றும் துரோகிகள் என்றும் முத்திரை குத்தி அவர்களுக்கெதிராக சொற்கணைகளை வீசிய போது அவர்கள் வீசிய பந்தையே அவர்களுக்கெதிராக வீசியவன் இவன். மாவட்ட சபையை கூட்டணியினர் ஏற்றுக்கொண்டபோது இவன் வெளியிட்ட "சதுரங்கமா?" "தம்பிமார் படிக்க வேண்டும்" போன்ற நூல்கள் இதற்கு உதாரணம். மக்களை அறிவூட்டி விழிப்புணர்ச்சியூட்டியதுடன் மட்டுமல்லாது சொல்லுக்கும் செயலுக்கும் வேறுபாடின்றி வாழ்ந்துகாட்டியவன் இவன். 1978ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சூறா




இறைகுமாரன்

வளியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வடமாகாணத்தில் இருந்து சேகரிக்கப்பட்ட உணவு உடைகளுடன் சென்று உதவியவன்... மட்டக்களப்புத் தொழிலாளர்களினால் உருவாக்கப்பட்ட உள்ளூர் கைத்தறிப் புடைவைகளை வடபகுதிக்கு எடுத்துவந்து விநியோகித்தவன் அதுபோல் வடபகுதி பணம்பொருள் உற்பத்திகளை தென் தமிழீழத்துக்குக் கொண்டு சென்றவன்.

இவனை ஒரு பரம வைரியாக குழப்பக்காரனாக கூட்டணியினர் சித்திரித்தபோது கருத்து ரீதியான முரண்பாடுதான் எனக்குண்டு என்பதைச் செயலில் காட்டியவன். 1981இல் மாவட்ட சபைத் தேர்தலின் போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமையலுவலகம் பொலிஸாரால் தீக்கிரையாக்கப்பட்டபோது அதனை அணைக்க முதல் வாளி தண்ணீரை ஊற்றியவனும் இவன்தான்.

இவனது நண்பன் உமைகுமாரன் இவனுக்கு எதிர்மாறான குணவியல்புகளைக் கொண்டவன். இவன் இராணுவ ரீதியான செயற்பாடுகளிலேயே நம்பிக்கை கொண்டவன். "மரணம் திடீர் திடீரென தலைகாட்டுப்போதெல்லாம் எனக்கு இப்போது பயம் ஏற்படுவதில்லை. எல்லாவற்றையும் எதிர்பார்த்துக் கொண்டு எதற்கும் சித்தமாகக் காத்திருப்பதில் ஒரு நிம்மதி புலப்பட்டு அவ்விதமே இருந்து வருகிறேன்"- இது அவனது குறிப்பேடுகளில் காணப்பட்ட வசனங்கள். இவனைக்கொன்ற அந்த ஆயுதக் குழுவினருக்கும் இதையேதான் அவன் கூறியிருக்கிறான். தலையில் நூறு சன்னங்களுடன் இவனது உடலத்தில் காணப்பட்ட அடையாளங்கள் இதனைத்தான் உணர்த்துகின்றன.

'சந்தர்ப்பவாதிகள் புரட்சிக் கோட்பாடுகளை வெறும் வறட்டுத் தத்துவமாகக் கருதுகிறார்கள் அவர்கள் புரட்சிக் கருத்துக்களைப் பேசுவார்கள் ஆனால் சந்தர்ப்பவாதத்தை நடைமுறைப்படுத்துவார்கள்" என்று குறிப்பிட்டுள்ளான் உமைகுமாரன். அதுவே இன்று நிதர்சனமாயுள்ளது. அழகாகச் சித்தாந்தம் பேசிய தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினரால் விடுதலையின் பேரால சுட்டுக்கொல்லப்பட்டான் உமைகுமாரன். ஆனால் இன்று அதே குழுவினர் தாய் நாட்டை மறந்து மாறி மாறி வந்த அன்னியப் படைகளின் எடுபிடிகளாய் மாறியுள்ளனர். அன்றுகூட அலவெட்டியில் தங்களால் கொலை செய்யப்பட்ட இறைகுமாரனுக்கும், உமைகுமாரனுக்கும் மட்டக்களப்பில் அஞ்சலிக்கூட்டம நடத்தினார்கள். இவ்வஞ்சலிக்கூட்டத்தின் மூலம் வரலாற்று மோசடிசெய்து உலகத்தின் கண்களில மண்ணைத் தூவப் பார்த்தார்கள். அவர்களால் இறைகுமாரன்-உமைகுமாரன் கொலைகளை எந்த விதத்திலும் நியாயப்படுத்த முடியவில்லை. நியாயப்படுத்தவும் முடியாது என்பதே யதார்த்தமான நிலையாக



உமைகுமாரன்

இவர்களது இறுதி யாத்திரையில் உரையாற்றிய அளவெட்டி மகாஜன சபைத் தலைவர் கேட்ட கேள்விகள் இதனை உறுதிப்படுத்துகின்றன. "..இளைஞர்கள் இருவரும் ஏன் கொலைப்பட்டார்கள் என்பது பெரும் புதிராக இருக்கிறது. கொலை செய்தார்களா? கொள்ளையடித்தார்களா? ஒழுக்கக்கேடாக நடந்தார்களா? துரோகிகளா? காட்டிக்கொடுப்பவர்களா..?" இந்த எந்தக்கேள்விகளுக்குமே விடையளிக்க முடியவில்லை. அதனால்தான் மட்டக்களப்பில் அஞ்சலிக்கூட்டம நடத்தி வேறு யாருடைய தலையிலாவது பழியைப் போடலாம் என முயற்சித்தார்கள். சிலரைப் பலகாலம் ஏமாற்றலாம். பலரைச் சிலகாலம் ஏமாற்றலாம் எல்லோரையும் எப்போதும் ஏமாற்ற முடியாது என்று கூறுவார்கள். நாளடைவில் உண்மை வெளியாகத்தான் செய்தது. அத்துடன் இப்படுகொலை விதையை விதைத்த சூத்திரதாரி யார் யாருக்காக இதைச் செய்தாரோ அவராலேயே காணாமல் போனார். போராளிகளின் மனதில் விடுதலையுணர்வே வளர்க்கப்பட வேண்டும் அப்படியான உணர்வைவளர்க்காது வெறும் குரோத உணர்வை வளர்க்க முற்பட்ட தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் ஒரு ஆயுதக்குழுவாகவே மக்கள் மனதில் தெரிகிறது. அத்துடன் போராட்டத்திலிருந்து ஆயிரக்கணக்கான இளைஞர்களை அந்நியப்படுத்திய பாரிய பொறுப்பையும் சுமக்கிறது.

இறைகுமாரனும் உமைகுமாரனும் கூட்டணித்தலைவர்களைத் திருப்திப்படுத்தி வாழ நினைத்திருந்தால் இன்று அவர்களை தமிழீழம் மறந்திருக்கும். ஆனால் அவர்கள் அப்படி நினைக்கவில்லை. சமூகத்துக்கு முன் மாதிரியாக வாழ்ந்து காட்டினார்கள். எல்லைப்புறத்தே சென்று குடியேறவேண்டும் என்பதை வெறும் கோஷமாக எடுக்கவில்லை, அங்கே சென்றுழைத்தார்கள் போராட்டத்தின் தேவை கருதி மக்களின் துயர் துடைக்க தமிழீழத்தின் பல பகுதிகளிலும் அலைந்தார்கள். போராளிகளின் மனதில் விடுதலை உணர்வை தியாக மனப்பான்மையை வளர்க்கும் இயக்கத்துடன் இணைந்து நின்றதனால் தான் யாரையும் காட்டிக் கொடுக்க மறுத்தார்கள். மரணத்தை துணிச்சலுடன் சந்தித்தார்கள். துரோகிகளுடன் போராடினார்கள். தமது சொந்த மண்ணிலேயே மரணித்தார்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினால் முதன்முதல் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டுக் கௌரவிக்கப்பட்ட தேசபக்தர்கள் என்ற வரலாற்றுக் குறிப்பையும் குறித்துக் கொண்டார்கள்.

அன்று வழக்கத்திற்கு விரோதமாகக் குண்டுச்சத்தங்கள் ஏதுமின்றி அழகிய காலைப் பொழுது அமைதியாக மலர்ந்தது. இருப்பினும் சிவலிங்கத்தார் இல்லம் மட்டும் புயல் அடித்து ஓய்ந்த கணக்காகக் காட்சியளித்தது.

# தூண்டு கோல்

சிவலிங்கத்தாரின் இல்லக்கிழத்தி சரஸ்வதி முழங்காலில் தலையைப் புதைத்தவாறு முதுகு குலுங்க விம்மிக்கொண்டிருந்தாள். சிவலிங்கத்தாரோ கோபமும் துயரமும் மாறி மாறித் தோன்ற குறுக்கும் நெடுக்குமாக உலாவிக்கொண்டிருந்தார். அவர்களது ஒரேயொரு மகள் தமிழ்ச்செல்வி பெற்றோரின் சுயநலத்தைப் பார்த்து மனம் வெந்துகொண்டிருந்தாள்.

இடையிடையே சரஸ்வதி, மண் மீட்கும் வேட்கையுடன் இயக்கத்திற்குப் போய்விட்ட ஒரே மகன் கபிலனை நினைத்து வாய்விட்டுப் புலம்பினாள். கோபத்துடன் மனைவியின் அருகே வந்த சிவலிங்கத்தார் "அழு. நல்லா அழு. ஒரு பிள்ளை பெத்து தலையில தூக்கி வைச்சிருந்தாய். அவனை இப்ப உலக்கத் தந்திருக்கிற தனை வேதனையை நினைச்சு ஒப்பாரி வையடி" என்றார்.

"அவன் இயக்கத்துக்குப் போடுவானெண்டு தானே அப்பா அவனின்ரை மனம் நோகாமல் செல்லமா வளர்த்தன் அப்பிடியிருந்தும் போயிட்டானே. நான் என்ன செய்யிறது."

"என்ன செய்யிறதோ... அவனுக்குப் பின்னாலை நீயும் போ ஆயுதம் தூக்கலாம்" என்று ஏளனமாகக் கூறிவிட்டு நகர்ந்துவிட்டார்.

பெற்றோரின் பேச்சினைக் கேட்ட தமிழ்ச்செல்வியின் மனம் வேதனையுற்றது. நாட்டை மீட்கும் போராட்டச் செயற்பாட்டில் தனது அண்ணன் கபிலனை நினைத்து தவளுடைய கண்களில் கண்ணீர் துளிர்த்தது. அவள் சிந்தும் கண்ணீர் சகோதர பாசத்தினால் மட்டும் ஏற்பட்டதல்ல. களத்தில் ஆயிரம் ஆயிரம் வேங்கைகள் ஈழத்தின் மீட்சிக்காக தங்களது இன்னுயிரைத் துச்சமென மதித்துப் போராடி வீரமரணமடைந்திருப்பதும், அடைந்துகொண்டிருப்பதெல்லாம் யாருக்காக என்பதனைச் சிந்திக்காத மக்கள்கூட்டத்தில் தனது பெற்றோரும் விதிவிலக்கல்ல என்பதனையும் நினைத்ததினாலும்தான். தனது சகோதரன் நாட்டின் சுதந்திரத்திற்காகத் தன்னை அர்ப்பணித்திருப்பது அவளுக்கு மிகவும் பெருமையாகவே இருந்தது. இன்னும் சொல்லப்போனால் அதை அவள் வரவேற்றாள். தனது சகோதரனைப் போன்று இன்னும் எத்தனை சகோதரர்கள் நாட்டுக்காகத் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள். அவர்களெல்லாரும் நினைத்திருந்தால் தமது பெற்றோர்களின் சகோதரர்களின் கண்ணீருக்கிடையில் போராட வந்திருக்கமாட்டார்களே அவர்கள் தங்களது தாய்மார்களின் கண்ணீரை மறந்து சுயநலனைப் புதைத்து, ஈழத்திலுள்ள அனைத்துத் தாய்மாரின் கண்ணீரைத் துடைத்து அடிமை விலங்கை உடைத்து ஒரு புதுத் தமிழீழம் படைக்கத்தானே புறப்பட்டிருக்கிறார்கள். இதையெல்லாம் எனது பெற்றோர் ஏன் உணரவில்லை? இவ்வாறே அவளது மனவோட்டம் சென்றது.

இன்னும் அழுதுகொண்டிருந்த தாயைப் பார்த்தாள். அவளுக்குப் பரிதாபத்தைவிட சீற்றமே பொங்கியெழுந்தது.

"அம்மா அழுதுகொண்டிருந்து என்ன செய்யப்போறீங்கள்: இதுக்கெல்லாம் அழாதேங்கோ. அண்ணா மட்டுமே இயக்கத்துக்குப் போனவர்."

மகளின் யதார்த்தமான நோக்குத் தாயைச் சிந்திக்கத் தூண்டவில்லை. மாறாக, கோபப்பட வைத்தது.

"பெத்த வயிறு துடிக்க நான் படுகிறபாடு கடவுளுக்குத்தான் தெரியும் அது விளங்காம நீ எனக்கு உபதேசம் சொல்லவே வெளிக்கிடுகிறாய."

அதைக் கேட்ட மகள் மெல்லச் சிரித்தாள்.

"நீங்கள் மட்டும் துடிக்கேல்லை. போராளிகளின்ரை தாய்மார் எல்லோருமே துடிக்கினம் தான்."

"எனக்கு இருக்கிறது ஒரேயொரு ஆம்பிளைப்பிள்ளை தானேயடி. என்னால அவனை எப்படிப் பிரிஞ்சிருக்கேலும்."

"அனேகமான வீட்டில ஒரேயொரு ஆம்பிளைப் பிள்ளையையே தாயே களத்துக்கு அனுப்பியிருக்கிறாள் இதுக்கு உதாரணமா பக்கத்து வீட்டுப் பரிமளா மாமியை நினைச்சுப் பாருங்கோ."

சிறுகதை

ஆம்! உண்மைதான். அவர்களது வீட்டினருகே வசிக்கும் பரிமளா தனது ஒரேயொரு மகனை, தனது ஐந்து மகள்மாரையும், அவர்களது எதிர்காலத்தையும் நினைக்காது தமிழ்த் தாய்க்குரிய தன்மானவுணர்வுடன் போராட அனுப்பி வைத்தாள். தனது மகன் களத்தில் புரியும் பல வீரதீரச் செயல்களைக் கேட்ட மாத்திரத்தே அவற்றையெல்லாம் மிகவும் பெருமையுடன் கூறுவாள். அதைக் கபிலனும் அருகில்நின்று முகம் விகசிக்கக் கேட்பான். அதைக் கண்ணுற்ற சரஸ்வதி பரிமளா போன பிற்பாடு மகனை எச்சரிப்பாள்.

"மோனை. நீ உவளின்ரை படிப்பிலை மட்டும் கருத்தாயிரு அவளுக்கென்ன பெடியனை இயக்கத்துக்கு விட்டிட்டுப் பெருமை பேசுறாள். நீ இனிமேல் அவள் வந்தால் கிட்ட வரக்கூடாது. உன்னையும் இயக்கத்தோட ஊறவைச்சிடுவாள். அதைக் கேட்டுக் கபிலன் உதடு பிரியாமல் புன்னகைப்பான். சில வேளைகளில் சரஸ்வதியும் சிவலிங்கத்தாரும் இரகசியமான குரலில் கதைப்பது அவளுக்குக் கேட்கும்.

"உவள் பரிமளா தன்ரை மோனின்ரை புகழைப்பாடியே கபிலனின்ரை மனத்தையும் மாத்திப் போடுவாள் கண்டியோ. அவள் வந்தாலும் கபிலனைக் கிட்ட நிக்க விடாதை சரசு"

சரஸ்வதியும் அதற்குத் தாளம் போடுவாள். இதைக் கேட்கும் போது தமிழ்ச்செல்வியின் மனம் மிகவும் வேதனையடையும். இவர்களைப் போல் இன்னும் பலர் இருப்பதனால் தானே தமிழருக்கு இன்னும் விடிவு ஏற்படவில்லை என்று நினைத்து மனம் குமைவாள்.

எதிரியுடன் களத்தில் மோதி மார்பில் குண்டேந்தி தனது மகன் வீரமரணம் அடைந்த பின்னும் மனம் கலங்காது தனது மூத்த மகளையும் போராட வழியனுப்பி விட்டு இன்றும் நெஞ்சுரத்துடன் வாழும் பரிமளாவைப் பார்த்து ஊர் வியந்தது. அப்போதெல்லாம் தமிழ்ச்செல்வியின் மனம் பரிமளாவின் நாட்டுப்பற்றை எண்ணி வியப்புறும்.

நாட்டுக்காகவே தனது பிள்ளைகளைக் களத்திற்கு ஈந்த இலட்சியத்தாய் பரிமளாவை எண்ணி வியப்புற்ற அவள் மனம், அதே வேளையில் சுயநலத்தின் மறுவடிவமாகிய தனது பெற்றோரை நினைத்துக் கசந்தது.

திண்ணையில் காலடியரவம் கேட்டு அவளது எண்ண ஓட்டம் தடைப்படவே தலையைத் திருப்பிய போது அவளது கண்கள் பரபரப்புடன் வந்த தந்தையைக் கண்டன.

"கெதியில வெளிக்கிடு சரசு கபிலன் திருநெல்வேலிக் காம்பில நிக்கிறான் என்று அறிஞ்சனான். அவனின்ரை கையைப் பிடிச்சாவது வெளியில எடுப்பம் கெதியில வா"

கண்களைச் சேலைத்தலைப்பால் துடைத்தவாறு அவசரமாகக் கணவரின் பின்னே போக ஆயத்தமானவளை மகளின் குரல் தடுத்து நிறுத்தியது.

"அம்மா நான் சொல்லுறதக் கொஞ்சம் கேளுங்கோ. போராளிகளிட்டையே போய் என்ரை பிள்ளையைத் தாவெண்டா கேக்கப் போறீங்கள். இது எவ்வளவு வெட்கம். போராளிகள் போராடுவதே எங்களுக்காகத்தானே. அதில உங்கடை மகனும் இணைஞ்சது எங்களுக்குத்தானே பெருமை"

மகளை முறைப்புடன் நோக்கிய சிவலிங்கத்தார் வார்த்தை என்ற பெயரில் அனலை அள்ளி வீசினார்.

"வாயை மூடிக்கொண்டிரு. ஆர் கேட்டது தமிழீழம். நாங்களே கேட்டனாங்கள். நாங்களே சொன்னனாங்களே போராடுங்கோ எண்டு. கண்டறியாத தமிழீழமும் மண்ணாங்கட்டியும். தமிழீழ மண் போராட்டமாம் மனிசரை நிம்மதியாக இருக்க விடுறாங்களில்லை"

தனது மனத்திலுறைந்துள்ள வெறுப்பை அள்ளி வீசிவிட்டு மனைவியை அழைத்துச் சென்றுவிட்டார்.

தந்தையின் கீழ்த்தரமான பேச்சால மனமுடைந்துபோய் நின்றுவிட்டாள் தமிழ்ச்செல்வி.

தன்மானத் தமிழனின் போராட்டம் பற்றிய உணர்வு இதுதானா? இவரைப்போன்று இன்னும் எத்தனை பேர் நம் மத்தியில் இருக்கிறார்கள்! தமது இன்னுயிரைக் கொடுத்துப் போராடி வரும் போராளிகளுக்கு இவர்கள் வழங்கும் புகழ்மாலை இதுதானா? தனது தந்தையைப் போன்று இன்னும் பலர் இருப்பதனால் தானே போராட்டம் இன்னும் முற்றுப்பெறவில்லை. நமது போராளிகள் தான் நமது காவல் தெய்வங்கள் என்பதை இச் சமுதாயம் உணராதா? என்றெல்லாம் அவளது உள்ளம் சிந்தித்துத் துயரம் கொண்டது.

அப்போது, உள்ளுணர்வின் செயற்பாட்டால் வாசலை நோக்கிய அவளின் விழிகள் சோர்வு மிக்க தாயின் நடையைக் கண்டன.

"அவன் வரமாட்டானாம் பெரிய மனிசன் மாதிரி எனக்கே புத்தி சொல்லுறான். நான் என்ன செய்யிறது"

"இனிப்ப ஒப்பாரி வைக்கிறாய். தங்கச்சியே தூண்டுகோலாக இருக்கேக்கை அண்ணனும் இப்படித்தானே. இதைப் பார். முளையில்லாத பிள்ளைகள்" என்று ஏளனத்துடன் கூறிவிட்டு கவலையுடன் சாய்மனைக் கதிரையில் சாய்ந்துவிட்டார் சிவலிங்கத்தார்.

தமிழ்ச்செல்வியின் உள்ளம் குதூகலித்தது. அண்ணனை நினைத்து அவளுக்குள் பெருமையுற்றது.

"ஷெல் விழுந்து, பொம்பர் அடித்து இறந்துபோனால் தான் நாலுநாள் அழுது விட்டு விதியின் மேல் பாரத்தைப் போட்டு விட்டு மனத்தைத் தேற்றுவீர்கள் ஆனால், போராடப் போனால் மட்டும் கதறுவீர்கள். அநியாயமாக இறந்து போவதைக்காட்டிலும் ஓர் உன்னத இலட்சியத்துக்காக ஆவி துறப்பது உயர்வானதல்லவா? அவன் தான் தமிழரின் கடைசிமூச்சு மட்டும் மாவீரனாக மக்களின் நினைவில் நிற்பான்." இதை அவள் வாய்விட்டுக் கூறவில்லை மனதினுள் நினைத்துக்கொண்டாள். அதேநேரம் தந்தை ஏளனத்துடன் கூறிய தூண்டுகோல் என்ற வார்த்தை அவள் மனதில் பதிந்தது. உண்மை தானே அண்ணனுக்கு அவள் தானே போராட்டச் சிந்தனைக்கு ஒரு விதத்தில் தூண்டுகோலாக இருந்தாள்.

போராட்டத்திற்கு நிச்சயம் தூண்டுகோல் அவசியம் தானே?

பெற்றோர்கள் தூண்டுகோலாக இல்லாத இடத்துப் பிள்ளைகள் தானே தூண்டுகோலாக இருத்தல் வேண்டும். ஒரு போராளியானவன், மக்கள் பார்வையாளராக இருக்காது பங்காளியாகித் தனது போராட்டச் சிந்தனைக்குத் தூண்டுகோலாக இருப்பதைத்

□ சித்திரா □

தான் விரும்புவானே. அப்போது தானொரு போராளியின் உடற்பலம் மட்டுமின்றி மனமும் உறுதியாகும். அப்போது தான் நமது போராட்டம் என்னும் புனிதப் போர் முனைநெடுகச் செல்லப்பட்டு மேன் மேலும் விஸ்தீரணமடையும்.

இன்னும் சிறிது காலத்தின் பின் தனது மகன் கபிலனின் வீரதீரச் செயல்களைக் கேட்டாவது தனது பெற்றோர் ஏனைய போராளிகளுக்குத் தூண்டுகோலாக மாறுவார்கள் ஏன் எனக்கும் தூண்டுகோலாக மாறலாம் ஆச்சரியமில்லை என நினைத்த அவளுள்ளத்தில நம்பிக்கை எனும் மொட்டு மெல்ல விரியத் தொடங்கியது.



கவிதை

## சுமக்கத்தெரியாத சுமை நீ

சற்றும் எதிர்பாராமல்
உன் நினைவுகள்
இந்தக் கணமுழுதும் எழுகின்றன.

பங்குனியின் கடுங்கோடையில்
இலையுதிர்த்து
அவியும் காற்றென
உனது கடிதவரிகள் புழுங்குகின்றன.

இத்தாலியின் 'ரோம' நகர அழகும்
காதும் மூக்கும் புரியாதபடிக்கு
பனிமழை கொட்டுகையில்
நீளமே விரிந்த வீதிகளில்
வேகமிகும் வாகனங்கள்
உல்லாச விடுதிகள்,
கோழிச் சூப்பு,
இளவேனிலின் 'சூரியக் குளியல்'...
பாய்ச்சலெடுக்கும் புதிய நாகரீகம்
என்ற செய்திகளைக் குறிப்பிட்டிருந்தாய்.

எனக்கொன்றும் வியப்பில்லை
இந்த மண்ணிலிருந்து
உனது அந்நியம்
ஒரு வருஷங்களெனினும்
உன் மாற்றங்களை
அறியமுடிகிறது.
மெல்ல மெல்ல
சார்ந்து போகும் நடப்பியலும்
மனப் பிறழ்வும் புரிகிறது.

எனினும்,
'எனது தேசத்திலிருந்து
ஒரு பிடி மண்ணெடுத்து அனுப்பு' என்பதில்
உனது ஆத்மாவின் துடிப்பை,
மன உந்தரிப்பை
உணருகிறேன்.

இங்கும், மாற்றங்கள் நிறைந்துள
நண்ப,
பறவைகள் மேற்கிலிருந்து கிழக்குநோக்கிப்
பறக்கையில்
மிளகாய்ச் செடியில்
பெண்கள் பழம் பிடுங்குகிறார்கள்.
முட்புதர் நீக்கி
வயல்களில் உழவு நடக்கிறது.
எனது மகன் காவலுக்குப் போகிறான்

புதிதாக
பாதைகள் வெட்டப்பட்டு
எல்லையில்,
போராளிகள் முகாமிட்டுள்ளனர்.
மக்களனைவரும்
வாழ்க்கையை உணரத் தலைப்பட்டுள்ளனர்.

இப்போது '[illegible]'
[illegible]
அங்கும், நிறவெறி கிளம்புகையில்
உன்னிலும் தீப்பற்றும்.

எஸ். கருணாகரன்

# தொழுநோய் (Leprosy) ஏற்படுவதற்குரிய காரணிகளும், அறிகுறிகளும், தடுப்பதற்கு சில ஆலோசனைகளும்

டாக்டர்
சீமாறன்

உலக சுகாதார அமைப்பின் (WHO) கருத்துப்படி உலகத்திலேயே மனிதனுக்கு அதிக அளவில் ஊனத்தை ஏற்படுத்துகின்ற வியாதிகளில் முக்கியமானது இந்த தொழுநோயாகும். இதனை குஷ்டரோகம் என்றும் சொல்வதுண்டு. இவ் வியாதியினால் ஏறக்குறைய 10.6 கோடி மக்கள் உலகம் பூராவும் அவஸ்தைப்படுகிறார்கள்.

"தொழுநோய்க்குரிய காரணிகள்"

'மைக்கோபக்டீரியம் லெப்ரேயி' (Mycobacterium Leprae) என்கிற பக்டீரியாக்கிருமியாலேயே இந்நோய் ஏற்படுகிறது. உலர் வெப்ப நிலை (Tropical Countries) நாடுகளிலேயே இவ் வியாதி பெரும்பாலும் காணப்பட்டாலும், அமெரிக்கா, இங்கிலாந்து, மத்திய தரைக்கடல் நாடுகள், மத்தியகிழக்கு நாடுகள் என்பவற்றில் இன்னும் இவ்வியாதி காணப்படுகிறது.

நோய் பரவும் முறை

இந்நோயினால் பாதிக்கப்பட்டவரின் சுவாசக்குழாய்களில் (Upper Respiratory Tract) இந்நோய்க்குரிய 'மைக்கோ பக்டீரியம் லெப்ரேயி' என்கிற கிருமிகள் செறிந்து காணப்படும். தும்மல் அல்லது இருமுகின்றபோது, இக்கிருமிகள் காற்றுடன் கலக்கின்றன. இதனை ஆரோக்கியமான ஒருவர் சுவாசிக்கும்போது அவருக்கு இவ்வியாதி ஏற்படுகிறது. இதனால் தான் இவ்வியாதியினால் பாதிக்கப்பட்டவரை ஆரம்பக் குறைந்தது முதல் நான்கு நாட்களுக்காவது (Infective Period) ஏனைய குடும்ப அங்கத்தவர்களிடமிருந்தும் மற்றவர்களிடமிருந்தும் தனிமைப்படுத்துவது (Isolation) வழக்கம். ஆனாலும் கிருமிகள் கொண்ட காற்றை சுவாசிக்கின்ற அனைவருக்குமே இவ்வியாதி ஏற்பட்டுவிடாது. ஆரோக்கியமாகவும் சுத்தமாகவும், வேறுநோய்களை இல்லாதவர்களுக்கும் இந்நோய் ஏற்படாது. பலவீனமானவர்களுக்கு (Low Resistance) இந்நோய் ஏற்படும்.

பலர் நினைப்பதுபோல், அல்லது நம்புவதுபோல், தொழுநோய் ஏற்பட்ட ஒருவரை தொடுவதால் இந்நோய் இன்னொருவருக்குத் தொற்றுவதில்லை. அதாவது இந்நோய் ஏற்பட்டவருக்கு பணிவிடை செய்வதாலோ, அல்லது வைத்தியம் செய்யும் வைத்தியர்களுக்கோ, தாதிகளுக்கோ தொடுவதினால் மாத்திரம் தொற்றிவிடாது. இந்நோய் 4 வயதுக்குக் கீழுள்ள குழந்தைகளுக்கு ஏற்படுவது மிகவும் அரிது. வயது முதிர்ந்தவர்களுக்கும் இது ஏற்படலாம். இரண்டுக்கும் இடைப்பட்ட வயதினரையே இந்நோய் பெரும்பாலும் பாதிக்கின்றது.

தொழுநோயில் மூன்று வகை உண்டு.

'ரியூபர்கியூலோயிட் லெப்ரஸி' (Tuberculoid Leprosy) என்கிற இவ்வகையில் தோலில் புண்கள் போன்று ஏற்படும். நரம்புகளையும் பாதிக்கும்.

இரண்டாவது வகை 'லெப்ரோமட்டஸ் லெப்ரஸி' (Lepro matous Leprosy) என்பதாகும். இதனால் தோல், வெளி நரம்புகள் (Peripheral Nerves) சுவாசக்குழாய்கள், ஆணின் விதைகள் (Testes) என்பன பாதிக்கப்படும். மூன்றாவது வகை இரண்டுக்கும் இடைப்பட்டதாகும் (Borderline Leprosy)

தொழுநோய்க்குரிய அறிகுறிகள்

'லெப்ரஸி' என்கிற இந்த தொழுநோய், மனிதனுடைய தோலையும், மேலேயுள்ள நரம்புகளையுமே பெரிதும் பாதிக்கின்றது. வெள்ளையான, குறிப்பிட்ட எல்லைகளைக்கொண்ட 'தேமல்' வியாதி போன்றிருக்கும். அவற்றில் உணர்ச்சியிருக்காது (Anaesthetic Lesions) பார்ப்பதற்கு அசிங்கமாகவும், அருவருப்பாகவும் இருக்கும். அதனால்தான் பலர் இவர்களைப் பார்த்துப் பயப்படுவதுண்டு. கைகளிலும், கால்களிலுமுள்ள நீண்ட வெளி நரம்புகளான (Peripheral Nerves 'அல்நார் நரம்பு' Ulnar Nerve), முழங்கை மூட்டுக்கு மேல் பாதிப்படையும். இதனால் இந்நரம்பு உணர்ச்சி வழங்கும் பகுதிகள் யாவும் உணர்ச்சியற்றுப் போகும்.

மணிக்கட்டு மூட்டியில் (Wrist Joint) ரேடியல நரம்பு Radial Nerve), மீடியன் நரம்பு Median Nerve) என்பன பாதிக்கப்படும். அதனால் உள்ளங்கையிலும் புறங்கையிலும் உணர்ச்சிகள் குறையும். முழங்காலடியில Late-ral Popliteal Nerve) 'லேட்ரல் பொப்லீட்டியல்' என்கிற நரம்பு பாதிப்புக்குள்ளாகும். இதனால் குதிக்கலிலும் உணர்ச்சிகள் குன்றுவதால புண்கள் அடிக்கடி ஏற்படும்.

தொழுநோயினால் ஏற்படும் ஆபத்துகள்

தொழுநோயினால், நரம்புகள் பாதிக்கப்பட்டு உணர்ச்சியற்றுப் போவதால், உதாரணமாக பாதம், உள்ளங்கை, அவற்றில் நெருப்புச் சுட்டாலோ, முள் குத்தினாலோ, அல்லது வெட்டுக்காயங்கள் ஏற்பட்டாலோ உணர்ச்சியிருக்காது. அதனால 'வலி' (Pain) இருக்காது. எனவே பாரிய காயங்களும், புண்களும் ஏற்படுவதுடன் அவை ஆறவும் நீண்டகாலம் எடுக்கும்.

சிகிச்சை முறை

தொழுநோய் நீண்டகாலவியாதி (Chronic Disease) என்பதால், முறைப்படியான சிகிச்சைக்கும், சிகிச்சையின் முழுப் பலனுக்கும் வியாதி ஏற்பட்டவரின் முழு ஒத்துழைப்பு அவசியம். 'தொழுநோயைப்பற்றி சமூகத்தில் தப்பபிப்பிராயங்களும், மூடநம்பிக்கைகளும் இன்னும் இருப்பதால், தொழுநோய் ஏற்பட்டவரை ஏதோ தீண்டத்தகாதவர்' என்று ஒதுக்கி அவருடைய மனநிலையை மேலும் பாதிக்காமல், கூட இருப்பவர்கள் ஆறுதலும் ஒத்தாசையும் வழங்கவேண்டும். தொழுநோயால் பாதிக்கப்பட்ட இடங்கள் உணர்ச்சியற்று இருப்பதால், அவற்றில் 'எரிகாயங்கள்', 'சுடுகாயங்கள்', 'உராய்வுக் காயங்கள்' என்பன ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். 'டப்ஸோன்' (Dapsone) ரைவம்பசின் Rifampicin) 'குளோபாஸிமைன்' (Clofazi-mine) போன்ற மருந்துகளே இந்நோய்க்கு பயன்படுத்தப்படும் மருந்துவகைகளாகும். இவ்வியாதியினால் சமுதாயத்தில் மிகக் குறைந்தோரே பாதிக்கப்பட்டாலும், ஆரம்பத்திலேயே சிகிச்சை பெறுவதால் ஏனையோருக்கும் வாராமல் தடுக்கலாம்.

# பேரழிவை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்கள்

## பாவிப்பதற்கு தடையுண்டு: உற்பத்திக்கு இல்லை

□ சவாலன் □

உலக நாடுகள் அணு ஆயுதங்கள் குறைப்பு மற்றும் ஏவுகணைகளின்பால் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் போது மிக வேகமாக இரசாயன ஆயுதங்கள் பெருகிக் கொண்டிருக்கின்றன. சோவியத் ரஷ்யாவிடம் மட்டும் 50 ஆயிரம் தொன் இரசாயன ஆயுதங்கள் இருப்பதாக 1986இல் ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதலாம் உலகமகா யுத்தத்தில் சுமார் 13 இலட்சம் பேர் இரசாயன ஆயுதங்களால் பாதிக்கப்பட்டதாகவும் ஒரு இலட்சம் பேர் இறந்ததாகவும் உத்தியோகபூர்வமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது 1925 இல் ஜெனிவா உடன்பாட்டில் இரசாயன ஆயுதங்கள் தடைபற்றி பேசப்பட்ட பின் அரை நூற்றாண்டுக்கு மேலாக எதுவித தீர்மானங்களையும் ஐ.நா. எடுக்கவில்லை. 198[illegible] இறுதியில் இரசாயன ஆயுதப்பாவிப்புக்கு ஐ.நா. தடை விதித்த போதும் தயாரிப்பிற்கு எதுவித தடையும் விதிக்கவில்லை. தயாரிப்பைத் தடை செய்வதில் முக்கிய இடர்ப்பாடு என்னவென்றால் தொழிற்சாலைகளில் மக்களுக்கான பாவனைப் பொருட்களைத் தயாரிக்கும்போது பக்கவிளைவாக இவை கிடைப்பதும் பிளாஸ்டிக் மற்றும் சிந்தட்டிக் தயாரிப்பில் இவை பயன்படுவதுமாகும். இங்கு வீணாகப் போவது ஆயுதமாக மாற்றப்படுகிறது. தற்பொழுது பாவனையில் உள்ள இரசாயன ஆயுதங்கள் பலதிறப்பட்டன.

1 நரம்பு மண்டல பாதிப்பு ஆயுதங்கள் (Nerve Agent)

இவை மணமற்ற, நிறமற்ற, சுவையற்ற வாயுக்கள் அசேதன பொசுபரசு குடும்பத்தைச்சேர்ந்தவை நரம்பு மண்டலம் மற்றும் உடலின் முக்கிய உயிர் நாடிகளைத் தாக்கி உடனடி மரணத்தை ஏற்படுத்தும் மிகக் கொடிய ஆயுதமாகும்.

2. எரிகாயங்களை உண்டாக்குபவை

இவை எண்ணைத்தன்மையான திரவவடிவமானவை உடலில் பட்டவுடன் சில நிமிட நேரங்களில் எரிகாயங்களை உண்டாக்கும் அத்துடன் நச்சுத்தன்மை வாய்ந்தவை ஆகையால் மரணத்தையும் ஏற்படுத்தலாம் முதலாம் உலக யுத்தத்தில் அநேகர் காயமடையக் காரணமாக இருந்தவை

3. மூச்சுத் திணறவைக்கும் வாயுக்கள்

விரைவில் ஆவியாகக் கூடிய திரவங்கள், ஆவியாகி சுவாசத் திணறல் மற்றும் மூக்கு, தொண்டை அரிப்பு, சுவாசப்பையில் காயங்களை ஏற்படுத்தும் மூச்சுத்திணறலால் உடனடி மரணமும் ஏற்படும் நரம்பு மண்டல பாதிப்பு ஆயுதங்களிலும் பாதிப்புக் குறைந்தவை

4 இரத்தத்தைப்பாதிப்பவை (Blood Agent)

இவை உடலில் ஊடுருவிச் சென்று சுவாச உறுப்புகளைப் பாதித்து மரணத்தை ஏற்படுத்தும் இரத்தத்திலுள்ள ஒட்சிசனை கலங்கள் உறிஞ்சும் செயற்பாட்டைத் தடை செய்யும். எனினும் நரம்பு மண்டல இரசாயனங்களிலும் பாதிப்புக் குறைந்தவை.

5 கண்ணீர்ப்புகை மற்றும் எரிச்சலூட்டும் வாயுக்கள்

இவை கண்களில் எரிச்சலை ஏற்படுத்தி கண்ணீரை வரவழைக்கும். தோலில் எரிச்சலை ஏற்படுத்தும் சிலவேளைகளில் குமட்டல் மற்றும் வாந்தியை ஏற்படுத்தும். பொதுவாக கலகக் கூட்டங்களைக் கலைக்கவும் யுத்தத்தின் போதும் பாவிக்கப்படும்.

6. மனநிலையைப் பாதிப்பவை (Psycho-Chemicals

தற்காலிகமாக மனக்குழப்பத்தை ஏற்படுத்தி, போதைப் பொருள்களைப் பாவித்தவர்களைப் போல செயற்படவைக்கும்.

7. தாவரங்களைப் பாதிப்பவை (Anti-Plant Agent)

பயிர்கள் மற்றும் காடுகளை அழிக்கப் பயன்படும் இவை அமெரிக்காவினால் வியட்னாம், கம்போடியா தாக்குதல்களின் போது பாவிக்கப்பட்டது. தாவர இலைகளை உதிரச் செய்வதுடன் மரங்களைப் பட்டவைக்கும் இவற்றிலுள்ள சேதன ஆசனிக்குகள் மனிதன் மற்றும் உயிரினங்களுக்கு நச்சுத்தன்மை வாய்ந்தவை. 'பாரம்பரிய' இரசாயன ஆயுதங்கள் வரிசையில் முதலாவதாக பொஸ்யீன்கள் சுவாச ஆயுதங்களாகப் பாவிக்கப்படுகின்றன. இவற்றைத் தயாரிக்கும், பராமரிக்கும் தொழிலாளர்கள் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மத்தியிலும் சுவாசப்பை காயங்கள், மனநிலைபாதிப்பு என்பவற்றுக்கு உட்படுகின்றனர்.

"இரசாயன ஆயுதங்களின் அரசன்" என அழைக்கப்படுவது கடுகுவாயு (Mustrad gas ஆகும். இது இரு குளோரோ ஈதையில் சல்பைட்டு எனப்படும் இரசாயனத்தைக் கொண்டுள்ளது. இதன் 'பெருமைக்கு' பல காரணங்கள் இருப்பினும் மனித உடலில் ஊடுருவும் தன்மை முக்கியமானதாகும். வெகு விரைவில் ஊடுருவும் இது எதுவித வலியையும் உடலில் ஏற்படுத்தாது பலமணி நேரங்களுக்குப் பின் ஊடுருவிய பகுதிகளில் தொற்றுகள் (Infection) கண்பார்வை அற்றுப் போதல், [illegible] என்பன ஏற்படும்.

இவற்றைவிட ஏராளமான உயிரியல் ஆயுதங்களும் உள்ளன.

# மே 22

மே–22.

இது சிறீலங்காவில் தேசிய வீரர்தினம் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

தந்தை செல்வா அவர்கள் கொடிய நாள் எனக் குறிப்பிட்டதும் இதே நாளைத்தான்

1972இல் அப்போதைய மக்கள் ஐக்கிய அரசாங்கம் புதிய அரசியலமைப்புச் சட்டத்தை நிறைவேற்றி அமுல்படுத்தத் தொடங்கிய நாள் மே-22. குடியரசுதினம் என்று பிரகடனப்படுத்தி குதூகலமாகக் கொண்டாடியவேளையில் நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் 'கொடிய அரசு' எனக் குறிப்பிட்ட குற்றத்திற்காக சிறைக் கம்பிகளுக்குப் பின்னாலே சித்திரவதையுண்ட நாள்.

இந்த நாளை தமிழ்மக்கள் எப்படி மறந்துவிடமுடியும்?

சிறீலங்கைச் சிங்களவர் மூன்றிலிரு பங்கு பெரும்பான்மையை பாராளுமன்றத்தில் பெற்ற முதலாவது சந்தர்ப்பத்திலேயே தமிழ் மக்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக்கிய நிலைமை—

சோல்பரி அரசியல் யாப்பின் தேசிய சிறுபான்மை இனத்தவருக்கு பாதுகாப்பளிக்க சேர்க்கப்பட்ட 29 ஆவது ஷரத்தையும் நீக்கிய புதிய அரசியலமைப்பு கொண்டு வரப்பட்டதனால் அல்லவோ, பிரித்தானிய காலனித்துவத்திலிருந்து விடுபட்டமையைக் கூட மகிழ்வுடன் ஏற்கமுடியாத நிலை ஏற்பட்டது என்பதை—

தமிழர் அரசியல் கட்சிகள் ஒன்றுபட்டு முன்வைத்த ஆறு அம்சக் கோரிக்கையைக்கூட உதாசீனம் செய்தமையால் தமிழ் மக்களின் அரசியல் கோரிக்கைகளை ஏற்று மதிப்பளிக்க சிங்கள ஆட்சியாளர்கள் தயாரக இல்லை என்பதை அறிவிக்க முறையை—

பொலிஸ் படையினரையும், ஆயுதப்படையினரையும் ஏவித் தமிழ்இளைஞர்களைச் சிறைக் கம்பிகளுக்குப்பின்னால் தள்ளிவிடுவதன் மூலம் தமிழ் மக்களின் எழுச்சியைத் தடுத்திடலாம் என எண்ணிச் சித்திரவதைப்படுத்திய கொடூரத்தன்மை—

உலகளாவிய ரீதியில் மனித நேசத்தைக் கடைபிடிப்பதாகக் காட்டிக்கொள்ளும் இடதுசாரிகள் கூட வகுப்புவாத எண்ணத்தில் மூழ்கி - இனவாதச் சகதிக்குள் சிக்கி - தமிழ் மக்களை அடக்க முற்பட்டமையினை—

இவற்றையெல்லாம் மறந்துவிடமுடியுமாயின் மே-22 இனை சாதாரணமாக மறந்துவிடலாம்.

செப்டம்பர் 7, 1978இல் ஜே.ஆர். அரசு புதியதொரு அரசியலமைப்பை அமுலாக்கிய வேளையில் அதுவரை குடியரசு தினமாகக் குறிக்கப்பட்ட மே-22 தேசிய வீரர் தினமாக பெயரை மாற்றிக்கொண்டது.

இளையவன்

தேசியவீரர்கள் என்ற பெயரில் இலங்கைத்தீவு ஆங்கில ஆதிக்கத்திலிருந்து விடுபடக் குரல் கொடுத்த உத்தமர்களைக் குறிப்பிட்டபோது அதில் சில தமிழர்களும் அடங்கியிருந்தனர்.

ஆனால், தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை நிலைநாட்டும் போரை அடக்கவும்- தமிழ் மக்களை இன ரீதியாக அழித்தொழிக்கக் கங்கணம் கட்டி நிற்கும் ஆயுதப்படையினர்தான் சிறிலங்காவின் தேசிய வீரர்களாக கௌரவம் பெறுகின்றனர் அதாவது சிறிலங்கா அரசு தமிழ்மக்களையும் அவர்களது அரசியல் அபிலாசைகளையும் எதிரியாகத்தான் கருதுகிறது-நடத்துகின்றது என்பதற்கு உதாரணமாகவே தேசிய வீரர் தினக் கொண்டாட்டங்கள் அமைகின்றன

ஆயுதப் படையினர் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைக்கும் சக்திகளிடமிருந்து நாட்டைமீட்கப் போரிடுவதாகவே அரசு சொல்லிக்கொள்கிறது ஆனால் சட்டம், ஒழுங்கைச் சீர்குலைத்த

(6ம் பக்கம் பார்க்க)

# வானொலியினால் இயக்கும் வெடிகுண்டுகள் இலகுவில் கண்டுபிடிக்க முடியாதவை

சூடான உலோகமும் சிதறுண்ட எலும்பும்... கருகிப்போன சிதைவுகள்... மேர்சிடிஸ் பென்ஸ் இன் சின்னாபின்னப்படுத்தப்பட்ட சிதைவு ஆங்காங்கே தாறுமாறாகப் பரவிக் கிடக்கும் உடல்கள்... 50 இலிருந்து 60 கிலோவரையிலான பிளாஸ்ரிக் வெடிமருந்து... கொழும்பின் மிகப்பெரிய வெடிகுண்டு... நினைக்கவே அச்சந் தருவதாயுள்ளது... மீண்டும் பயத்துடன் வாழ்வதா? யாருக்குமே பாதுகாப்பில்லையா?

குண்டுவெடிப்புடன் உடன் நிகழ்ச்சியாக ஏற்பட்ட இழப்பின் மதிப்போ அகோரமானது. பொதுமக்களின் உழைப்புப்பற்றிப் பயங்கரவாதிகள் கவலைப்படுவதில்லை என்பது வெளிப்படை. ஐந்து யார் தூரமே இருந்திருப்பினும் கூட இறப்பினை ஏற்படுத்தக் கூடிய அளவிற்கு வெடிமருந்தினளவு போதுமானதாயிருந்தது. எந்தவொரு நிர்வாகத்திலும் இரண்டாவது நிலையிலிருக்கும் ஒரு மனிதனை இலகுவாகக் கொல்வது சிறிய சாதனையொன்றல்ல.

அரசாங்கம் பெற்றுக்கொண்ட (கிளர்ச்சி எதிர் நடவடிக்கைகளை ஆச்சரியமூட்டும் வகையில் வெற்றிகரமாக நடாத்திவிடினும் அல்லது இனப் பிரச்சினை பற்றிய அரசின் கொள்கையில் மாற்றத்தினைக் கொண்டுவராவிடினும் நிச்சயமாக இந்த அடியானது மனோதிடத்தினைக் குறைத்துவிடும்.

ஜனாதிபதிக்கு அடுத்த முக்கிய இலக்கு ரஞ்சன் விஜயரட்ணாவாகத்தான் இருக்கும் மூன்று சுற்றுப் பாதுகாப்பினைக்கொண்ட (Three Rings or Security) ஜனாதிபதி தான் மிகக்கூடியளவில் பாதுகாக்கப்படும் முக்கியஸ்தராவார்.

புற எல்லை அல்லது வெளிச்சுற்று.

இடைநிலைப் பாதுகாப்பு.

அண்மை நிலைப் பாதுகாப்பு.

ஏனைய முக்கியஸ்தர்களின் ஆயுதந்தரித்த மெய்ப்பாதுகாவலர்கள்கூட கடைசிச் சுற்றினுள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

கடைசியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலின் அபாயகரமான கடைசி நாட்களில் இத்தகைய பிரச்சினையொன்று காரணமாக மெய்ப்பாதுகாவலர்களின் இருகுழுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதின.

ஆனால், குண்டுதுளைக்காத மோட்டார் வண்டிகளும் (Bullet Proof Limousines) ஜீப் வண்டிகள் நிறையத் திரளும் மெய்ப்பாதுகாவலர்களும் இத்தகைய பரிமாணத்தைக் கொண்ட வெடிகுண்டொன்றிலிருந்து பாதுகாப்பினைத் தரா

ஏனெனில் சிதைவுகள் மிகவும் பரந்துபட்ட விதத்தில் சிதறுண்டு வேகத்துடன் வல்லுனர்கள் சம்பவம் நடந்த இடத்திற்கு வருமுன்பே சிதைவுகள் குழப்பப்பட்டுவிட்டன.

றேடியோவினால் இயக்கப்படும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்தல் உண்மையிலேயே இயலாததொன்றாகும். வழியில் சென்றுகொண்டிருக்கும் சகல வாகனங்களையும்

> வானொலியினால் இயக்கும் வெடிகுண்டினால் அமைச்சர் ரஞ்சன்விஜேரெட்னா கொலை செய்யப்பட்டார். குண்டுவெடிப்புடன் ரஞ்சன் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார். இதேபோன்ற தனியக்க வானொலிக் குண்டுதான் ராஜீவ் காந்தியின் கொலைக்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று நம்பப்படுகிறது.
>
> ரஞ்சன் கொலை தொடர்பாக ரோகண குணசேகரா ஐலண்ட் பத்திரிகையில் எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இது.

வெடிமருந்தின் பாரிய அளவு காரணமாகத் தாம் கையாண்டவற்றில் மிகவும் கஷ்டமானது இதுவே என வெடிமருந்து வல்லுனர்கள் கூறுகின்றனர்.

ஜெலிக்னைற்றிலும் பார்க்க இருமடங்கு சக்தி வாய்ந்த பிளாஸ்ரிக் வெடிமருந்தே பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என சந்தேகப்படுகின்றனர். ஏனெனில், வெடிக்கையின் பின்பு மணத்தினைக் கொண்டு ஜெலிக்னைட்டை அடையாளம் காணலாம்.

வெடித்தலின் போது இருந்த இடஅமைவினை (Scene of Blast) மீள அமைத்துப் பார்ப்பது கஷ்டம் என வல்லுனர்கள் கூறுகின்றனர்.

பரிசோதித்தல் நடைமுறையில் சாத்தியமாகாது வாகனங்கள் நிற்பாட்டக்கூடாது என வழிபூராகவும் உள்ள பகுதிகளைப் பிரகடனப்படுத்தவும் முடியாது.

எதிர் திட்டமிடுதலுக்கும், தாக்குதலை மேற்கொள்வதற்கும் சந்தர்ப்பம் ஒன்றினைக் கொடுக்காதுவிடுவதன்மூலமே இத்தகைய வெடிகுண்டுத்தாக்குதல்களைத் தவிர்க்கலாம் என வல்லுனர்கள் கூறுகின்றனர்.

நன்கு திட்டமிடுவதன் மூலமும் ஒருவரது அசைவுகளை முன்கூட்டியே தெரியவிடாது பார்த்துக் கொள்வதன் மூலமும் போலிகளைப் பயன்படுத்துவதன்மூலமும் (Dummy or Decoy) இத்தகைய தாக்குதல்களிலிருந்து தப்பலாம்.

இக்குண்டுவெடிப்பின் பின்பு சிதைவுகளைப் பரிசோதித்த வல்லுனர்கள்,

வடிவமைக்க வெடிகுண்டு (Shaped Charge) போலத் தொழிற்படக்கூடிய எனவும் வீதிக்குச் செங்குத்தாக 90 பாகையில் அதிர்வு செல்லக்கூடியதாகவும் வைக்கப்பட்டிருந்ததாகவும் கூறினர்.

வெடிப்பின் மையமானது முன்புறமாகப் பாதுகாப்பில் ஈடுபட்டிருந்த விசேட அதிரடிப்படை வாகனத்தையும், அமைச்சரின் காரின் முன் பகுதியையும் தாக்கியது ஜீப் துண்டு துண்டாகச் சிதறியது. அமைச்சரின் காரும் சிதைவாக்கப்பட்டது.

வழமையில் முன்னால் ரோந்து செல்லும் வாகனத்திற்கும், முக்கியஸ்தரின் வாகனத்திற்கும் இடையில் 5 அல்லது 6 யார் இடைவெளிதான் இருக்கும். ஆனால் இச் சம்பவத்தின் போது இடைவெளி குறைந்து காணப்பட்டது. ஏனெனில் போக்குவரவு நடமாட்டம் காரணமாக முன்னால் சென்ற வாகனத்தின் வேகம் குறைந்திருக்கலாம் நகர்ந்து கொண்டிருக்கும் இலக்கினைத் தாக்க வேண்டியிருந்ததால் வடிவமைத்தவெடிகுண்டு ஒன்றினையே பயன்படுத்தியிருக்க வேண்டும். வெடிப்பின் ஆகக் கூடிய சக்தியை இலக்கின் மீது பிரயோகிக்கும் பொருட்டு வெடிகுண்டானது வாகனத்திற்கு சார்பில் இருக்கையின் பின்பகுதியிலேயே வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

இக்குண்டினை இயக்கியவர் தன்னைப்பாதுகாக்கும் பொருட்டு வெடிப்பின் பின்புறமாகவே நிலைபெற்றிருப்பார். மரங்களின் பின்புறமாகவோ அல்லது திம்பிரிகஸ்யாய பக்கமாக நடைபாதையின் மேல் அமைந்திருந்ததொலைத் தொடர்புப் பெட்டிகளின் பின்புறமாகவோ மறைந்து நின்றிருக்கலாம். குறிப்பிட்ட கணிசமிழமையன்று கொலையாளிகள் மிகவும் அதிஷ்டமுள்ளவர்களாகவே இருந்திருக்கவேண்டும். ஏனெனில்பெரும்பாலும் வார இறுதிகளில் அமைச்சர் கொழும்பிற்கு வெளியே சென்றுவிடுவார்.

கொழும்பு பல்கலைக்கழகப் பெண்கள் விடுதியின் முன்புறமாகவே வெடிகுண்டு வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் என சந்தேகிக்கின்றனர். ஏனெனில் துன்முல்ல சந்தியை அண்மித்த பின்பு அமைச்சரின் வாகனம் எப்பக்கமாகத் திரும்பும் என முன்கூட்டிச் சொல்ல முடியாது.

இத் தாக்குதலானது எல்.ரீ.ரீ.ஈயின் வேலையே என்னும் நம்பிக்கையில் பொலிசார் உறுதியாகவுள்ளதாகத் தெரிகிறது.

பெண்கள் விடுதியின் முன்னால் வெடிகுண்டு வைக்கப்பட்டிருந்ததாகக் கருதுவதால் ஜே.வி.பி சம்பந்தப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் இவ் வெடிகுண்டினை இயக்கிய ஆணோ, பெண்ணோ அப்பகுதியை நன்கு அறிந்த ஒருவராக இருத்தல் வேண்டும். ஆனால் ஜே.வி.பி தான் பொறுப்பு எனும் வாதத்தினைப் பொலிசார் ஏற்பதாக இல்லை.

இத்தகைய தாக்குதல் ஒன்றினை மேற்கொள்வதற்கு வேண்டிய செயல் வல்லமை ஜே.வி.பியிடம் இல்லை என பல உளவுத்துறை அதிகாரிகள் எடுத்துக் கூறுகின்றனர். ஜே.வி.பியிடம் இத்தகைய செயல் வல்லமை இருந்திருப்பின் அவர்களின் இத்தகைய பாரிய திட்டத்தினைப் பற்றித் தமக்கு முன்கூட்டியே தெரிய வந்திருக்கும் என்பதில் உளவுத்துறை அதிகாரிகள் மிகவும் உறுதியாகவுள்ளனர் ஏனெனில் ஜே.வி.பியினை அல்லது எஞ்சியிருக்கும் அதன் கூறுகளைத் தாம் முழுமையாக ஊடுருவிவிட்டதாக இவ்வதிகாரிகள் கூறுகின்றனர்.

உண்மையான முயற்சிக்கு முன்பு கொலையாளிகள் வெடிகுண்டுத் தாக்குதலை ஒத்திகை பார்த்திருக்கலாம். மேலும் யார் அதற்குப் பொறுப்போ அவர்கள் முன்னைய சந்தர்ப்பங்களில் வெற்றிகரமாக வெடிகுண்டுகளை வைக்கத் தவறியிருக்கலாம் என்பதையும் அதிகாரிகள் நிராகரித்துவிடவில்லை.

மேலும் ரோந்து சென்ற விசேட அதிரடிப்படையினர் ராஜகிரிய எல்லையிடத்திலுள்ள தமது தளத்துடன் மேற்கொண்ட தகவல் தொடர்பு சம்பாஷணையைக் கொலையாளிகள் ஒட்டுக்கேட்பதற்கும் எவ்வித வழியும் இல்லை இழக்க விசேட அதிரடிப் படையினருடனான மோதலில் விடுதலைப் புலிகள் எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சினை இதுதான் — அதாவது விசேட அதிரடிப் படையினரின் தகவல் தொடர்பினை ஒட்டுக் கேட்க முடியாததேயாகும்.

பாதுகாப்பான வானொலி உபகரணங்கள் (Secure Radio Sets) இல்லாததால் ஏற்பட்ட பிரச்சினையை நன்குணர்ந்த விசேட அதிரடிப்படையினர் 1980 ஆம் ஆண்டளவில் பாதுகாப்பான வானொலி உபகரணங்களைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

வானொலியினால் இயக்கும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடித்தல் முடியாததொன்றாதலால் இவற்றை எதிர்கொள்வதற்குரிய ஒரேபொருவழி, எமது நடவடிக்கைகளையும் எண்ணங்களையும் எதிரி அறிந்து கொள்ளாதபடி பார்த்துக் கொள்வதேயாகும். இவற்றினை எதிரி அறிந்து கொள்ளாவிடின் அவரினால் நன்கு திட்டமிட்ட தாக்குதலை மேற்கொள்ள முடியாது. நேருக்கு நேர் நீர்ச்சண்டை பிடிக்கவில்லை. மறைந்து நிற்கும் எதிரியுடனே சண்டை பிடிக்க வேண்டியுள்ளது. உமக்கு அடிக்கும் வரையில் எங்கிருந்து அடி வரும் என்பதைச் சொல்லமுடியாது.

அவர்கள் தமது தலைகளைப் (மூளையை) பாவிக்கின்றனர் எந்தநேரமும்திட்டமிட்ட படியும் எமமை அவதானித்த படியும் உள்ளனர். நாமும் அதனையே செய்யவேண்டும். நாமும் எதிர் பார்த்த படியே இருத்தல்வேண்டும்

அண்மைக் காலங்களில் வடக்கு கிழக்குப் பகுதிகளில் பாதைகளைப் பாதுகாப்பான தாக்கும் ரோந்துகளின் மீது நடாத்தப்படும் தொடர்ச்சியான தாக்குதல்களிலிருந்து ஒன்றுமட்டும் தெளிவாகின்றது — எமது தந்திரோபாயங்களில் அடிக்கடி மாற்றஞ் செய்ய வேண்டும்.

இத்தாக்குதல்களை நன்கு அவதானித்தால் குறிப்பிட்ட விதத்திலேயே (Pattern) இருப்பதாக அதிகாரிகள் கூறுகின்றனர். சகலபாதுகாப்புக்காகவும் தாக்குதல்களும் காலையிலேயே — ஆறு மணிக்கும்எட்டு மணிக்குமிடையில் — நிகழ்ந்துள்ளன.

எனவே தந்திரோபாயங்களை மாற்றவேண்டும் பாதைகளைப் பாதுகாப்பான தாக்கும் ரோந்துகளை எப்போதும்ஏன் காலையில்தான் அனுப்பவேண்டும்? ஐ.ஆர்.ஏ யினர் பிரிட்டிஷ் பிரதமமந்திரி மார்கரெட் தட்சரிற்குச் சொல்லியதை அதிகாரிகள் நினைவு கூர்ந்தனர்.

முக்கியஸ்தர் (VIP) ஒருவர் எப்போதுமே அதிஷ்டசாலியாக இருக்க வேண்டிய அதேவேளை தீவிரவாதிகள்ஒரு தரம் மட்டுமே அதிஷ்டசாலியாக இருந்துவிட்டால் போதுமானது.

மே 22...
5ம் பக்கம் பார்க்க

ஜே.வி.பி யினருக்கு எதிராகப் போராடியபோது கூட விமான மார்க்கமான தாக்குதல்கள் நிறுத்தப்படவில்லை நீண்டதூர எறிகணைகள் ஏவப்படவில்லை. எரிபொருள், மாத்திரைக்கும் உணவுப்பொருள் மற்றும் மருந்துப்பொருள்கள் எடுத்துச் செல்ல கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை எரிபொருளும் விவசாயஉரங்களும், மின்கலங்கள் போன்ற பொருள்கள் கொண்டுசெல்லத்தடைபோடப்படவில்லை,

இவற்றை ஆழமாக அலசிப் பார்த்தால் சிறீலங்கா அரசு தமிழ்மக்களைத்தனது குடிமக்களாகக் கருதவில்லை என்பது வெளிப்படையாகும். இலங்கைத் தீவில் ஒப்பற்ற கொலையை மேற்கொள்ள ஆயுதப்படையினருக்கு உத்வேகம் ஊட்டிய நாள் தான் மே 22 ஆகும். இந்த மே22இன் தேசிய வீரர்தினக் கொண்டாட்டம் தமிழ்மக்களைஅழிக்கும் ஆயுதப்படையினரை சிறீலங்கா அரசகௌரவிப்பதற்கான நாளாகும் எனவேதமிழ் மக்கள் இதை ஒரு கொடிய நாள் எனக் குறிப்பிடுதல் பொருத்தமுடையதாகிறது.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஜனனம் 30 — 12 — 1966

வீரமரணம் 24 — 05 — 1989

### கப்டன் நகுலன்
### (வேலுப்பிள்ளை நகுலேஸ்வரன்)

சாதி பேதத்தின் காலையர் படை வாசலில் வடிருந்த வேளையில் வந்தவுன் மரணம் - தந்த துயர் தீருமுன்பே ஒராயுதம் கட்டவகர பயந்தோட வைத்ததுவே புலி.

இருபத்து மூன்றாண்டே இருந்த வாழ்வினிலே வரலாறு கண்டு வேலனாகிப் - பெரும் புகழ்பெற்ற நகுலனும் எங்கள் குலமகனை ஈன்றதனால் மகிழ்வு.

நகுலேஸ்வரன் வீதி,
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

பெற்றோர், உறவினர்,
நண்பர்கள்.

(B/3565)

# இவ்வார நோக்கு

# தாய்க்குப் பதில் மகன்

இந்திரா காங்கிரஸ் கட்சியின் தலைவரும், இந்தியாவின் முன்னாள் பிரதமருமான ராஜீவ்காந்தி நிகழ்ந்த இருபத்தோராம் திகதி இரவு தமிழ்நாடு சிறிபெரும்புதூரில் நிகழ்ந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டுவிட்டார். நேரு குடும்பத்தின் மூன்றாவது பிரதமரான இவர் வன்முறையால் கொலை செய்யப்பட்ட இரண்டாவது நேருகுடும்பத்தவராவார்.

1980இல் நிகழ்ந்த விமான விபத்தில் கொல்லப்பட்ட இவரின் தம்பியான சஞ்சய்காந்தியின் மரணத்தைத்தொடர்ந்து ராஜீவ் காந்தி அரசியலில் பிரவேசித்தார். விமான விபத்தில் சஞ்சய் காந்தி கொல்லப்பட்டமையும் திட்டமிட்ட சதி வேலை என்றே பலர் கருதுகின்றனர்.

சகோதரனின்மரணத்துடன் அரசியலிற் பிரவேசித்த ராஜீவ் காந்தி தாயாரின் மரணத்துடன் இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவராகவும், இந்தியாவின் பிரதமராகவும் பொறுப்பேற்றார். இதனைத் தொடர்ந்து இவரின் தீவிர அரசியல் வாழ்க்கை ஆரம்பமானது.

## முந்திய அரசியல்வாதிகள் ஒதுக்கப்பட்டனர்

ராஜீவ்காந்தி இந்தியாவின் பிரதமராகப் பதவி ஏற்றபோது உலகின் இளைய பிரதமராக அவர் இருந்தார். துடிப்புள்ள இளைஞராக இருந்த ராஜீவ் காந்தியின் அரசியல் அனுபவமின்மை இந்திரா காங்கிரஸ் கட்சியினுள்ளும், இந்தியாவின் அரசியலிலும் பல மாற்றங்களுக்கும் தவறுகளுக்கும் இடமளித்தது. இவற்றில் சில முன்னேற்றகரமாகவும், சில நெருக்கடிகளைத் தோற்றுவிப்பவையாகவும் இருந்தன.

> இந்தியாவிற்கு நேரு குடும்பத்தில் இருந்து ஒரு பிரதமர் தேவை என்பதைவிட இந்திரா காங்கிரஸின் ஒற்றுமைக்கு நேரு குடும்பத்தின் பிரதிநிதிகள் தேவை என்பதே உண்மையாகவுள்ளது. இந்நிலையை உருவாக்குவதில் நேரு குடும்பத்தினர் சகலரும் திறம்படச் செயலாற்றியுள்ளனர் என்றே கூறலாம்.

ராஜீவின் நடவடிக்கைகளால் இந்திரா காங்கிரஸ் மூத்த அரசியல்வாதிகள் பலர் ஓரம் கட்டப்பட்டார்கள். தனது பாடசாலை நண்பர்கள் குழாத்தை தனது அரசியலில் இணைத்துக்கொண்ட ராஜீவ் காந்திக்கு எதிர்காலத்தில் அவர்களினால் பல அரசியல் தொல்லைகள் ஏற்பட்டன. 'மிஸ்டர் கிளீன்' என வர்ணிக்கப்பட்ட ராஜீவ் காந்தி குறுகிய காலத்தில் அப்பெயரைக் களங்கப்படுத்திக் கொண்டார்.

காங்கிரஸ் கட்சிக்குள்ளும் அவரது செயற்பாடுகள் விமர்சிக்கப்பட்டன. காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த ராஜீவ் அதிருப்தியாளர்கள் வெளியேறினார்களை, அவர்களுக்கு வி.பி. சிங் தலைமை தாங்கினார். காங்கிரஸ் கட்சியினுள் ராஜீவ் மிகவும் அதிகாரம் மிக்க ஒருவராக இருந்தார் என்பதற்கு தனது ஐந்து வருட காலத்தினுள் முப்பது தடவைகள் அமைச்சரவையை மாற்றியமைத்ததில் இருந்தே புரிந்து கொள்ளலாம். அதேபோன்று இந்திரா காங்கிரஸ் ஆட்சியில் இருந்த மாநிலங்களின் முதலமைச்சர்களையும் தான் விரும்பியவாறு விரும்பிய நேரத்தில் ராஜீவ்காந்தி மாற்றியமைத்தார்.

## பொருளாதார நடவடிக்கை

அதேவேளை இந்தியாவின் அபிவிருத்தி தொடர்பாக கைத்தொழிலை நவீனப்படுத்துதல் என்பதோடு, இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தியா உலகில் எலக்ரோனிக் துறையிலும், கம்பியூட்டர் துறையிலும், உலக முன்னணி நாடுகளில் ஒன்றாகத் திகழ வேண்டும் என்பதில் ராஜீவ் தீவிர அக்கறைகாட்டினார். இதற்காக கம்பியூட்டர்கள் எலக்ரோனிக் உற்பத்திப் பொருள்கள் இறக்குமதியிலும், உற்பத்தியிலும் ஆர்வம் காட்டினார்.

## சர்வதேச அளவில்மாற்றம்

இந்த இலக்கை அடைவதற்காக சர்வதேச உறவுகளிலும் ராஜீவினால் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன. ராஜீவிற்கு முன்னர் இந்திய அமெரிக்க உறவில் இருந்த விரிசலை நிவர்த்தி செய்து அமெரிக்காவுடன் சற்று நெருக்கமான உறவைப் பேண ராஜீவினால் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இதன் பிரகாரமே இந்தியாவிற்கு அமெரிக்காவின் சுப்பர் கொம்பியூட்டர்கள் கிடைக்கப் பெற்றனவாம். இந்தக் கொம்பியூட்டர்கள் பலமான நிபந்தனையின் அடிப்படையில் வழங்கப்பட்டவையாகும்.

## பெருமளவு ஆயுத இறக்குமதி

அதேவேளை இந்தியாவை இராணுவரீதியில் பலம் பொருந்திய ஒரு பிராந்திய வல்லரசாக்கும் நடவடிக்கையில் ராஜீவின் தீவிர கவனம் சென்றது. இந்திய கடற்படை அணுசக்தி நீர்மூழ்கி கொண்டதாக மாற்றப் பட்டதோடு விமானம் தாங்கிக் கப்பல் ஒன்றும் மேலதிகமாகச் சேர்க்கப் பட்டது. நவீன இராணுவத் தளபாடங்களும் கொள்வனவு செய்யப்பட்டன.

ராஜீவ் ஆட்சிக் காலத்தில் உலகின் மிகப் பெரிய ஆயுத இறக்குமதி நாடாக இந்தியா இருந்தது.

1985 - 1989 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலத்தில் ஈராக் 12 பில். டாலருக்கும், ஜப்பான் 11 பில். டாலருக்கும் சவூதி அரேபியா 9 பில். டாலருக்கும், சிரியா 6 பில். டாலருக்கும் ஆயுதம் இறக்குமதி செய்த வேளையில் இந்தியா 17 பில் டாலருக்கும் ஆயுதத்தை இறக்குமதி செய்தது.

இப்பெரும் ஆயுத இறக்குமதிகளிலேயே போபோஸ் பீரங்கி பேர ஊழல், ஜேர்மன் நீர்மூழ்கி பேர ஊழல் இடம் பெற்றதாகக் குற்றச் சாட்டுகள் எழுந்தன. இதேவேளை

## மகனுக்குப் பதில் மனைவி?

உள்ளூர் இராணுவ தளபாட உற்பத்தியிலும் கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக ஏவுகணை உற்பத்தியில் இந்தியா தீவிர கவனம் செலுத்தியது. இந்தவரிசையில் திரிசூல் அக்னி போன்றவற்றின் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன அதோடு பாகிஸ்தான் அணு ஆயுதத்தை உற்பத்தி செய்யுமாயின் இந்தியாவும் தனது அணுவாயுத கொள்கையில் மாற்றங்களைக் கொண்டுவரும் எனவும் தெரிவிக்கப்பட்டது

## அண்டை நாட்டு உறவுகள்

ராஜீவ் காலத்தில் இந்தியாவின் அண்டை நாட்டு உறவுகள் பெரிதாக சீர்பட்டதாக இல்லை. சீனாவுடன் நல்லுறவைப் பேணுவதில் அக்கறை காட்டிய ராஜீவ் காந்தி தென் ஆசியாவின் சிறிய நாடுகளின் விடயத்தில் இந்தியாவின் செல்வாக்கை ஏதோவொருவகையில் திணித்து இந்தியாவின் ஆதிக்கத்தினுள் அவற்றைக் கொண்டு வருவதற்கே முயற்சித்தார். தென் ஆசிய பிராந்தியங்களின் ஒத்துழைப்பு மாநாடு என சார்க் அமைக்கப்பட்டிருப்பினும் இந்தியாவின் செல்வாக்கு இந்நாடுகளில் நிலைநிறுத்தப்பட வேண்டும் என்பதில் அக்கறையாக இருந்தார்

இதனால் தென் ஆசிய அண்டை நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதில் சிக்கல் ஏற்பட்டது நேபாளத்துடன் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டின் காரணமாக நேபாளத்திற்கு இந்தியா ஊடாகச் செல்லும் வீதிகள் யாவும் அடைக்கப்பட்டதனால் நேபாளம் பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்நோக்க வேண்டி இருந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினையை இந்தியாவிற்கு சாதகமாக்க ராஜீவ் முற்பட்டார். இதனால் இவ்விவகாரத்தில் தலையிட்ட ராஜீவ் காந்தி இந்தியாவின் நலனைப் பேணக்கூடிய ஒப்பந்தம் ஒன்றில் சிறிலங்கா ஜனாதிபதியுடன் 1987 இல் கையொப்பமிடப்பட்ட இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் இலங்கை



வந்த இந்திய இராணுவம் தமது உரிமைக்காகப் போராடிக் கொண்டிருந்த தமிழ் மக்களுக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது.

பல நூற்றாண்டுகளாக இந்தியாவின் நட்பு சக்தியாக இருந்த தமிழர் மீது இந்திய இராணுவம் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையால் 6000 க்கு மேல் தமிழர்கள் கொல்லப்படவும், பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் நாசமாக வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது.

அதேவேளை தோல்வியில் முடிவுற்ற இந்த ஒப்பந்தம் இந்தியாவிற்கு அபகீர்த்தியை ஏற்படுத்திக் கொடுத்த ஒப்பந்தமாகவும் அமைந்தது.

அடுத்து மாலைதீவு அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கையை ஒடுக்குவதற்கு இராணுவத்தை உடன் அனுப்பி இப்பிராந்தியத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தையும், பிராந்தியத்தின் பாதுகாவலன் இந்தியா தான் என்பதையும் காட்ட முற்பட்டார்.

இதனால் ராஜீவ் காந்தியின் நடவடிக்கையில் பிராந்திய நாடுகளுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தியதோடு அவர்களை எச்சரிக்கை அடையவும் வைத்தன. நேபாளம், சிறிலங்கா போன்ற நாடுகளில் இந்தியாவிற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் எழுந்தன.

காஷ்மீர், பஞ்சாப் பிரச்சினைகளின் காரணமாக பாகிஸ்தானுடனான உறவும் திருப்திகரமாகஇருக்கவில்லை பாகிஸ்தானுடன் நல்லுறவிற்கான இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாயினும் முறுகல் நிலை தொடர்ந்தே வந்தது. காஷ்மீரிலும், பஞ்சாப்பிலும் ஏற்பட்ட வன்முறைக்கு பாகிஸ்தான் மீது இந்தியா குற்றம்சாட்டிய போது கராச்சியிலும், இஸ்லாமாபாத்திலும் ஏற்பட்ட குண்டு வெடிப்புகளுக்கும், கொலைகளுக்கும் இந்தியா மீது பாகிஸ்தான் குற்றம்சாட்டியது.

இந்நிலையில், 1989 இல் நடைபெற்ற தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி பெரும்பான்மையைப் பெறத் தவறியது ராஜீவ் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்தார். பலவீனமான கூட்டு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தது. இந்தியாவின் அரசியலில் என்றுமில்லாதவாறு வகுப்புக் கலவரங்கள் அதிகரித்தன.

ராஜீவ்காந்தி 1979இல் தாயார் இந்திராகாந்தி கடைப்பிடித்த வழியினைப் பின்பற்றி சிறுபான்மை கூட்டணி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதில் வெற்றிகண்டார். ஆனால், அடுத்த பிரதமர் என்று எதிர்பார்ப்பாக இருக்கையிலேயே குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டார்.

ராஜீவின் மரணம் இந்திய அரசியலில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது என்பதைவிட இந்திரா காங்கிரஸ் கட்சியில் ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையாகாது. சாதி, மத வேறுபாடுகள் மலிந்த இந்தியா போன்றே இந்திரா காங்கிரஸும் முரண்பாடுகள் நிறைந்ததோடு, வேறுதேசியத் தலைவர்களைக் கொண்டதாகவும் இல்லை. மறுவளமாகக் கூறின் கடந்த நாற்பது வருடத்தில் வேறுதேசியத்தலைவர்கள் உருவாக நேரு குடும்பத்தவர் அனுமதிக்கவில்லை என்றே சொல்லலாம்.

இந்நிலையில் நேரு குடும்பத்தின் நேரடி வாரிசுகள் இல்லாதவிடத்து நேரு குடும்பத்துடன் இணைந்துகொண்ட ராஜீவ் காந்தியின் மனைவி சோனியா காந்தி காங்கிரஸ் கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இதனை சோனியா காந்தி ஏற்கின்றாரா இல்லையா என்பதல்ல பிரச்சினை.

காங்கிரசைப் பொறுத்தும் நேரு குடும்பத்தினர்தான் ஆள வேண்டும் என்பதைவிட காங்கிரஸ் கட்சியின் எதிர்கால ஒருமைப்பாட்டிற்கு நேரு குடும்பத்தினர் தேவையாகவுள்ளனர் என்பதே மிகப் பொருத்தப்பாடுடையதாகும். அல்லாதுவிடில், மூத்த காங்கிரஸ் தலைவர்கள் பலர் இருக்க சோனியா காந்தி காங்கிரஸ் தலைவராக எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க முடியும்?

ஜெயா

# உலகத் தலைவர்கள் கவலை

"ராஜீவ் காந்தி சீன மக்களின் ஒரு நல்ல நண்பன். அவரை இழந்து நாம் தவிக்கிறோம்" என்று சீன கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு முன்னாள் இந்தியப் பிரதமரும், இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவருமான ராஜீவ் காந்தியின் மறைவு குறித்த இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளது.

"அரசியல் கருத்து வேறுபாடுகளை தீர்த்துக் கொள்வதற்காக மக்கள் வன்முறையிலேயே இறங்கி வருவது திகைக்க வைக்கக் கூடிய பேரதிர்ச்சியாகும். உலகம் புது ஒழுங்குகளை நாடிச் செல்லும் இவ்வேளையிலேயே ராஜீவின் மரணம் ஏற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது இவ்வாறு ராஜீவின் மறைவு குறித்த இரங்கல் செய்தியில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ்புஷ்குறிப்பிட்டுள்ளார்

ராஜீவ காந்தியின் மரணம் சோவியத் மக்களை ஆறாத் துயரில் ஆழ்த்தியுள்ளது என சோவியத் ஜனாதிபதி மிக்கெயில் கொர்பசேவ் தமது செய்தியில் கூறியுள்ளார்.

துணிச்சல் மிகுந்த ஒரு தைரிய புருஷராக விளங்கிய ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டது இந்தியாவிற்கும் ஏன் இந்த உலகத்திற்குமே ஒரு பெரும இழப்பாகும் எனப் பிரித்தானிய பிரதம மந்திரி ஜோன் மேயர் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ராஜீவ் காந்தியின் மரணச் செய்தி கேட்டு அதிர்ச்சியும், அவநம்பிக்கையையும் கொண்டிருப்பதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

நேபாள பிரதம மந்திரி, ஜப்பான் பிரதம மந்திரி ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா, ஐ.நா. சபையின் தலைமைச் செயலாளர் பெரஸ் டி. கொயிலர் பங்களாதேஷ் பிரதமர், சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா ஆகியோரும் இரங்கற் செய்திகளை அனுப்பி வைத்துள்ளனர்.

# வீர வேங்கைகள் நினைவாக விளையாட்டுப் போட்டி

(மருதிக்துறை)

யாழ். கோட்டை இராணுவ முகாம் தாக்குதலில் வீர மரணமடைந்த வடமராட்சி வீரவேங்கைகள் நினைவாக தும்பளை இளைஞர்கள் விடுதலைப் புலிகள் பண்பாட்டுக் கலைப், பிரிவின் ஆதரவுடன் இரு நாள் விளையாட்டுப் போட்டிகளையும் பரிசளிப்பு விழாவையும் நடாத்தவுள்ளனர்.

தும்பளை கணக்கிலாவத்தை மைதானத்தில் ஆவணி மாதம் 4ம் 5ம் திகதிகளில் (4.5.8.91) இவ் விளையாட்டுப்போட்டிகள் பரிசளிப்பு விழாக்கள் நடைபெறவுள்ளன. இப்போட்டிகளிலே ஆண்கள் பெண்களுக்கான சைக்கிளோட்டப் போட்டிகள், கரப்பந்தாட்டம் அஞ்சல் ஓட்டம், மரதன் ஓட்டம் துடுப்பெடுத்தாட்டப் போட்டி விநோத உடைப் போட்டி கவிதைப்போட்டி பாடல் போட்டி (புரட்சிப்பாடல்), நாடகப்போட்டி பேச்சுப்போட்டி உட்பட இன்னும் பலபோட்டிகள் இடம் பெறவுள்ளன. போட்டிகள் யாவும் வடமராட்சி மட்டத்தில் நடைபெறுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (25)

ராஜீவின் மரணத்திற்கு காரணமாக

# இளம்பெண் தலைமையிலான

# தற்கொலைபடை செயற்பட்டது

(டில்லி)

ராஜீவ் காந்தியின் மரணத்திற்கு வழிவகுத்த குண்டானது எந்த ஒரு நேரத்திலும் வெடிக்கக்கூடிய மாதிரியானதாக இருந்தது என்றும், இதனை இயக்க இளம்பெண் தலைமையிலான குழுவொன்று தற்கொலைப் படைபோல செயற்பட்டது என்றும் ஏஜென்சிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடிப்பு நேரிட்ட இடத்தில் வயர், கம்பிகள், ஸ்பிரிங் மற்றும் பற்றறி ஒன்றையும் வைரேசை மற்றும் வெடிகுண்டு நிபுணர்கள் கைப்பற்றி உள்ளார்கள் என்று ஏஜென்சிச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்தப் பொருள்களின் எஞ்சிய பகுதிகள் சில இறந்த அந்தப் பெண்ணின் உடலில் பொருத்தப்பட்டிருந்ததாகவும் அந்தப்பெண் யார் என்பது இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இடுப்புபெல்ட் குண்டுவெடிப்பைத் தூண்டிவிடும் கருவியின் சில பகுதிகளும், நிர்ணயிக்கப்பட்ட ஒரு நேரத்தில் வெடிக்க வைக்கச் செய்வதான சாதனம் ஒன்று அங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேநேரம் இந்திய உள்துறை அமைச்சகம் இந்தப் புலன்விசாரணை முடியும்வரை எந்தவொரு தகவலையும் வெளியிட மறுத்துவிட்டது.

## புலிகள் செய்ததற்கான சாத்தியமே அதிகம்

## சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

தமிழகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம் பெற்ற குண்டுவெடிப்பில் மரணமடைந்த ராஜீவ் காந்தியின் கொலைக்குத் தமிழீழ விடுதலைப்புலிகளே காரணமாக இருந்தனர் என்பதற்கான சாத்தியம் அதிகமாக இருப்பதாக சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் மத்தியில் பேசிய ரணதுங்கா இந்திய புலனாய்வுத்துறை இது குறித்து உதவியினை நாடினால் வழங்கத் தயாராக உள்ளோம் என்றும், இதனைப்பொருட்படுத்த முடியாத காரியமாக நினைக்கக்கூடாது என்றும் தெரிவித்தார்.

மேலும் அவர் இலங்கை பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கொலை செய்யப்பட்டதும் இதேபோன்றதான ''றிமோல்ட் கொன்ட்ரோல்'' அமைப்பே பயன்படுத்தப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டார்.

அதே நேரம் பாக்கு நீரிணையிலும் சிறிலங்கா கடற்படையினர் ரோந்துப் பணிகளை அதிகரித்துள்ளனர் என்றும் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு விடுதலைப் புலிகள் தப்பிச் செல்லாமல் இருப்பதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளுடன் இச்சம்பவத்தை தொடர்புபடுத்தி பல பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன இதே வேளை வெடிகுண்டு வெடிப்பில் கைதேர்ந்த விடுதலைப் புலிகளைச் சேர்ந்த நியூட்டன் கொழும்பிலிருந்து மட்டக்களப்பு சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் சென்றதாகவும் அவர் தற்போது எங்கிருக்கின்றார் என்பது தெரியவில்லை எனவும் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் அறிவித்துள்ளனர்

### காசுக்கட்டளைகள்

எதுவும் அறவிடப்படாமல் மாற்றிக் கொடுக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகம் விடுத்த செய்திக் குறிப்பு ஒன்றில் கூறப்பட்டுள்ளது. ஆதலால் காலங்கடந்த காசுக்கட்டளைகள் வைத்திருக்கும் பொதுமக்கள் அனைவரும் 91 05-29க்கு பின்னர் தத்தம் பகுதியிலுள்ள அலுவலக அஞ்சலதிபர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட அஞ்சல் அத்தியட்சர் கேட்டுள்ளார்.

### மூன்று

பின்னரே அரசாங்கம் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா நேற்றுக் காலை நடத்திய செய்தியாளர் மகாநாட்டில் இதனைத் தெரிவித்தார்.

வெசாக் பண்டிகைக்காலம் கௌதம புத்தரின் அஹிம்சைக் கொள்கையைப் பின்பற்றுவதற்கான வாய்ப்பினை அளிக்கிறது என்பதை நிலைவுபடுத்த வேண்டும் என்று சமயத் தலைவர்கள் வேண்டியுள்ளார்கள்.

### புலமைப்

எனவும் இதனை கொத்தணி அதிபர்கள் மூன்றாம் திகதி கோட்டக்கல்வி அலுவலகத்திற்கு ஒப்படைக்கும்படியும் யாழ் கல்விப்பணிப்பாளர் சுந்தரலிங்கம் கேட்டுள்ளார். அத்துடன் இடம்பெயர்ந்து வேறு பாடசாலைகள் மூலம் தோற்றவுள்ள மாணவர்கள் தமது சுய விபரப் பிரகடனத்தையும் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஈ)

## அஞ்சலிக் கூட்டம்

கப்டன் நகுலனின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டமும், சனசமூக நிலையத் திறப்பு விழாவும் இன்று மாலை ஏழு மணியளவில் மீசாலை வடக்கிலுள்ள நகுலன் வீதியில் இடம்பெறவுள்ளது, கலை பண்பாட்டுக் கழகத்தினரின் கனத்தில் காத்தான் என்னும் சிந்து நடைக்கூத்தும் இடம்பெறவுள்ளது. (செ. த. மை.)

## கிளைமோர் தாக்குதல்

சுட்டுவன் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 3-30 மணியளவில் சிறிலங்கா இராணுவத்தினர்மீது விடுதலைப்புலிகள் கிளைமோர் தாக்குதல் மேற்கொண்டனர் இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு பலத்தசேதம் மேற்பட்டதாகத் தெரியவருகிறது.

### இராணுவம்

லைச் சேர்ந்த ராஜா என்பவரே கொல்லப்பட்டவராவார்.

வியாபாரத்திற்காக சென்ற கிளிநொச்சியைச் சேர்ந்தவர்களான ஐ நந்தகுமார் (வயது 22), சுநர்காபநாதன் (வயது 26), மன்னாரைச் சேர்ந்த ம. மாணிக்கதாசன் (வயது 34), அச்சுவேலியைச் சேர்ந்த செ. வசந்தகுமார், சுழிபுரத்தைச் சேர்ந்த இராசேந்திரம், செட்டிகுளத்தைச் சேர்ந்த செல்வன் ஆகியோரே இச்சம்பவத்தில் பலத்த காயமடைந்தவர்களாவர். இவர்கள் ஐவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஈ)

### நியூயோர்க்

ஊ புஇலலை என அவசரக் கேட்டிருந்தார். இந்தப்பேட்டி தான் ராஜீவ் காந்தி அளித்த கடைசிப் பேட்டி என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### வெங்கட்ராமன்

அரசாங்கம் அமைப்பது பற்றி ஆலோசிக்கலாம என்ற கருத்தை வெளியிட்டுள்ளது.

தேசிய முன்னணி மற்றும் இடதுசாரிகட்சிகள் சார்பில் ஜெய்பால்ரெட்டி நேற்று புதுடில்லியில்கருத்து வெளிபடுகையில், முன்னாள் பிரதமர் வி. பி சிங்கும், ஜோதிபாசும் ஜனாதிபதியைச் சந்தித்த சமயம் தேசிய அரசாங்கம் பற்றி விவாதித்திருந்ததாகத் தெரிவித்தார். பொதுத் தேர்தல் மத்தியில் தேசிய அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார் ஜெயபால் ரெட்டி.

நேற்றுக்காலையில இந்திரா காங்கிரஸ் பிரதிநிதிகள் குழு ஜனாதிபதியைச் சந்தித்த சமயம் தேசிய அரசாங்கம் பற்றி ஏதும் பிரஸ்தாபிக்கப்படவில்லை என்று காங்கிரஸ் கட்சிப் பேச்சாளர் முக்கர்ஜி தெரிவித்தார். நாட்டின் ஜனநாயக பாரம்பரியத்தில் தேசிய அரசு என்ற பேச்சுக்கே இடமில்லை என்றார் அவர்.

தேசிய அரசாங்கம் தொடர்பாகத் தமது கட்சி இந்த நிலையில் அபிப்பிராயம் தெரிவிப்பது பயன்பொருத்தமாகாது என சமாஜவாதி ஜனதாக் கட்சிப் பேச்சாளர் சத்தியப் பிரகாஷ் மாளவியா தெரிவித்தார்

### ஊக்குவிப்புக்

விப்புக் கொடுப்பனவுகளை மாத்திரம் வழங்கியுள்ளன.


பாதிக்கப்பட்ட இடங்களில் திணைக்களங்கள் அல்லது சேவை நிலையம் திறக்கப்பட்டு உத்தியோகத்தர் கடமைக்குச் சமுகமளித்திருந்தால் அவர்களுக்கு ஜனவரி 1 ஆம் திகதி 1988இல் இருந்து ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கும்படி பணிக்கப்பட்டு உள்ளது.

அரசாங்க நிருவாகமாகாண சபைகள், உள்ளூராட்சி அலுவல்கள் அமைச்சின் செயலாளர் ஆர் அபேரத்ன இதற்கான அரசாங்க நிருவாகச்சுற்றறிக்கை 7/91ஐ அனைத்துத் திணைக்களங்களுக்கும் அனுப்பியுள்ளார்.

கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி திறைச்சேரியினால வழங்கப்பட வேண்டும என்று அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாதிப்புக்குள்ளான பிரதேசத்தின நிரந்தரக் குடியிருப்பாளராக இருப்பினும், பாதிப்பில்லாதபிரதேசத்தில் கடமை புரிபவர்களுக்கும் திணைக்களங்கள் இயங்காமல் இருந்திருப்பின் அத்திணைக்களத்தில் வேலை செய்பவர்களுக்கும் மேற்படி ஊக்குவிப்புக் கொடுப்பனவு வழங்கப்பட மாட்டாது

இந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை முந்திய சுற்று நிருபங்களான 357, 40/89, 40/89 42/90 களுக்கமைய வழங்கும் படி பணிக்கப்பட்டுள்ளது.




## வடமராட்சி அதிகாரிக்கு மடுவில் நிவாரணம்

(மன்னார்)

வடமராட்சியில் இருக்கும் தனது குடும்பத்தினருக்கும் தனக்கும் மடுத்திருப்பதியில் இருக்கும் ப. நோ கூ. சங்கக் கிளையில் அகதிகளுக்கான நிவாரணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார் மன்னார் மாவட்ட கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர். மன்னாருக்கு வந்து கடமையாற்றுமாறு விடுக்கப்பட்ட வேண்டுகோளை ஏற்று அங்கு சென்ற இவர் தமக்குரிய கடமைகளைத் தவிர்த்துவிட்டு மடுத்திருப்பதியிலுள்ள 15ஆம்இலக்கக்கிளையில் தமக்கும் தமது குடும்பத்தைச் சேர்ந்த மற்றும் ஐந்து பேருக்கும் நிவாரணங்களைப் பெற்றுக்கொண்டு இரண்டு நாளில் வடமராட்சிக்குத் திரும்பியுள்ளதாகத் தெரிய வருகிறது.

### காங்கிரஸ்

காங்கிரஸ் மத்திய செயற்குழு தன்மீது வைத்திருக்கும் நம்பிக்கை தனது மனதை நெகிழச்செய்வதாக சோனியா காந்தி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

பண்டிதர் ஜவகர்லால்நேரு; திருமதி இந்திரா காந்தி, திரு ராஜீவ்காந்தி ஆகியோர் கட்சிக்கும் நாட்டுக்கும் தம்மையே அர்ப்பணித்தனர் என்று என்று சோனியா காந்தி தமது அறிக்கையில் குறிப்பிட்டு அவர்களது நினைவும் தியாகங்களும் வேறு பல முக்கிய பெரும் காங்கிரஸ் தலைவர்கள் செய்த தியாகங்களும் கட்சி வலுவுடன் இழக வகை செய்யும் என்று தாம் உறுதியாக நம்புவதாகக் கூறியிருக்கிறார்.

அதேவேளை திருமதி சோனியா காந்தி தலைமைப் பதவியை ஏற்க மறுத்த முடிவு பற்றிக் கட்சிக்குத் தெரியும் என்று இந்திரா காங்கிரஸ் கட்சிப்பிரதிநிதி முக்கர்ஜி செய்தியாளரிடம் தெரிவித்தார்.

கட்சி உரிய நேரத்தில் தக்கதொரு முடிவை மேற்கொள்ளும் என்று கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் முக்கர்ஜி தெரிவித்தார்.

காங்கிரஸ் மத்திய செயற்குழு சோனியா காந்தியைக் கட்சித்தலைவராகத் தேர்ந்தெடுத்தது தகவல் கிரியை நடந்த பிறகு அவரின் மனதை மாற்றிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வது உட்பட எல்லா அம்சங்களிலும்குழு பரிசீலனை செய்யும் என்று ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் சொன்னார்.

மற்றொரு கேள்விக்குப் பதிலளிக்கையில் நேற்றுக்காலை ஜனாதிபதி ஆர் வெங்கட்ராமனைச் சந்தித்த இந்திரா காங்கிரஸ் பிரதிநிதிக் குழு ஒன்று நாட்டில ராஜீவ் காந்தி கொலையினால் ஏற்பட்ட விளைவுகளை விவாதித்ததாகக் கூறினார்.

### உலகத் தலைவர்

னர் நேற்று தலைநகர் வந்து சேர்ந்தார் பாகிஸ்தானின் முன்னாள் பிரதம மந்திரி திருமதி பெனாசிர் பூட்டோ எதிர்க்கட்சிக் குழுவின் தலைவராக புதுடில்லி வந்து சேர்ந்துள்ளார் சாம்பியா பிரதம மந்திரி, மொறக்கோ நாட்டின் நீதித்துறை அமைச்சர், யப்பான் முன்னாள் பிரதம மந்திரி நாகோ தெக்சிக்கோ நேற்று இரவு வந்து சேர்ந்தார்கள். நேபாளத்தில் பதவி விலகும் பிரதம மந்திரி கே. பி. பட்டாரி உயர் நிலைக் குழுவின் தலைவராக புது டில்லி வந்து சேருவார்.

நேபாளத்தின் ஜனநாயகக் கட்சியின் குழுவும் புதுடில்லி வந்து சேர்ந்துள்ளது.

பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய நாடுகளின் பிரதம மந்திரிகள் சோவியத் யூனியன், அமெரிக்கா. சீனாவின் துணை அதிபர்கள், மற்றும் நிக்கரகுவாவின் முன்னாள் அதிபர் டானியல் ஒட்டேகா ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

ஐ. நா. தலைமைச் செயலகத்தின் சார்பில் வீரேந்திர தயாளும், பிரிட்டன், மெக்சிக்கோ. ஜேர்மனியின் வெளியுறவு அமைச்சர்கள், குவைத்தின் நாட்டின் வெளியுறவுத்துறை உதவி அமைச்சர்கள் இந்த இறுதிச் சடங்கில் கலந்து கொள்வார்கள்.

கனடாவின் வெளியுறவு இணை அமைச்சர் பாமரா மெட்வால், சிங்கப்பூர் சுகாதார அமைச்சர் ஆகியோரும் ராஜீவ் காந்தியின இறுதிச் சடங்கில் கலந்து கொள்கிறார்கள்.

### ராஜீவின்

துச் செல்லப்படும். மக்கள் தமது கண்ணீர் அஞ்சலியை காலை பதினொரு மணிவரை செலுத்துவார்கள்.

பதது தேசிய பாதுகாப்புப் படைக் கம்பனிகளும், இந்தத் தைந்த யரா இராணுவக் கம்பனிகளும் மரணச்சடங்கில் கலந்து கொள்ளும் தலைவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும்.

டில்லியில அனைத்து அலுவலகங்களும் நாளை மறைந்த தலைவருக்கு மரியாதை செலுத்தும முகமாகப் பூட்டப்பட்டிருக்கும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 81 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.